# கோபத்தை வெல்லும் வழி

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# கோபத்தை வெல்லும் வழி

<u>பொருளடக்கம்</u>


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சினத்தை மறந்த இளவரசன் | 5 |
| 2. | நாம் ஏன் கோபம் கொள்கிறோம் | 7 |
| | 2.1 துறவியும் படகோட்டியும் | |
| 3. | சினம் காத்தல் | 15 |
| | 3.1 நரகமும் தெய்வலோகமும் உண்டா? | |
| | 3.2 ராஜமாலாவின் கதை | |
| 4. | பொறுமையும் பொறுத்தலும் | 34 |
| 5. | மக்களில் இழிவானவர்கள் | 36 |
| | 5.1 சினத்தால் அழிந்த எஜமானி | |
| | 5.2 சினத்தினால் மருமகளைக் கொன்ற மாமியார் | |
| 6. | சினம் கொள்ளாமை | 44 |
| 7. | சினத்தை வெல்லும் வழி | 48 |
| 8. | சினம் கொண்டு தம்மை இகழ்ந்தோரைப் பகவான் புத்தர் வென்ற கதை | 56 |

# கோபத்தை வெல்லும் வழி

## 1. சினத்தை மறந்த இளவரசன்

பகவான் புத்தர் காலத்தில் இந்தியாவில் வைசாலி என்றோர் பட்டணம் இருந்தது. அப்பட்டணத்து மன்னரின் மைந்தர்களில் ஒருவன் மிகவும் கோபக்காரன்; கொடுமைக்காரன்; சீக்கிரம் கோபமடைவான்; சிறு விஷயங்களுக்கெல்லாம் சினங்கொண்டு பிறரைத் தண்டிப்பான்.

பெற்றோரும், பெரியோரும், நண்பர்களும் இளவரசனுக்கு அறிவுரை கூறியும் பலனில்லை. அவர்களுடைய அறிவுரைகளை இளவரசன் ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. எவராலும் தம் மகனின் கொடிய சுபாவத்தை மாற்ற முடியவில்லை என்பதை அறிந்த பெற்றோர் மிகவும் கவலை கொண்டு, இறுதியாகப் பகவான் புத்தரிடம் அவனை அழைத்துச் சென்றனர். பெற்றோர் பகவான் புத்தரை வணங்கிய பின், தம் மைந்தனின் கொடிய சுபாவத்தை விளக்கி, அவனுக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டிக் கொண்டனர்.

பகவான் புத்தர் இளவரசனை அருகிலிருந்த ஒரு பூங்காவனத்திற்கு அழைத்துச் சென்றார். புதிதாக முளைத்திருந்த ஒரு செடியின் அருகில் நின்றார். புதிதாக முளைத்திருந்த அந்தச்சின்னஞ்சிறு செடியில் இரண்டே இரண்டு இலைகள் மட்டுமே தளிர்த்திருந்தன.

பகவான் புத்தர் இளவரசனிடம் அந்தச் செடியைச் சுட்டிக் காண்பித்து, "இளவரசரே, அந்தச் செடியின் ஓர் இலையைப் பறித்து, அதன் சுவையை அறிந்து கூறுங்கள் " என்றார்.

இளவரசன் ஓர் இலையைப் பறித்து வாயில் வைத்தான். மறுகணமே அந்த இலையைத் துப்பினான். அதன் சுவையை வாயிலிருந்து போக்குவதற்காக மீண்டும் மீண்டும் காறித் துப்பினான். அதைச் சபித்துக் கொண்டு, அந்தச் சின்னஞ்சிறு செடியைக் காலால் மிதித்து, நசுக்கி அழித்தான்.

"இளவரசே, என்ன நடந்தது?" என பகவான் புத்தர் கேட்டார். "பகவான், இது விஷச் செடி. முளையிலேயே இதற்கு இவ்வளவு விஷம்

என்றால், இது வளர்ந்து மரமானால் இதன் விஷம் எவ்வளவு கொடியதாக இருக்கும்! இது வளர்ந்து பெரிதானால் உயிர்களுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுக்கும். இதை முளையிலேயே அழித்துவிட வேண்டும்" என்றான் இளவரசன்.

இளவரசன் அப்படிக் கூறியதும், பகவான் புத்தர் இளவரசனுக்கு அறிவுரை கூறினார்.

"இளவரசே, இந்தச செடியின் விஷம் போல்தான் மனிதர்களின் கோபமும், இந்தச் செடியிலிருந்த விஷம் உனக்குத் துன்பத்தைத் தந்தது போல், உன்னிடமுள்ள கோபமும் பிறருக்குத் துன்பத்தைத் தரும். கோபத்தினால் நீ செய்யும் கொடுமை, தீயினால் சுடுவது போன்ற துன்பத்தைப் பிறருக்குத் தரும்."

"இது விஷச்செடி. முளையிலேயே இதற்கு இவ்வளவு விஷம் என்றால், இது வளர்ந்து மரமானால் இதன் விஷம் எவ்வளவு கொடியதாக இருக்கும்" எனக் கூறி "எப்படிச் செடியை அழித்தாயோ, அதுபோல் உன்னிடமுள்ள கோபம் என்னும் விஷத்தையும் அழித்துவிடு" என்றார்.

இப்போது நீ வயதில் சிறியவன். உன் கோபமும் சிறியதே! நீ வளர்ந்து பெரியவனாகும்போது, உன் கோபமும் பெரிதாகிவிடும். இளம் வயதிலேயே உன் கோபம் பிறருக்குத் தாங்க முடியாத வேதனையைத் தருகிறதென்றால், நீ பெரியவனாகும்போது, உன் பெரிய கோபம் இன்னும் எவ்வளவு பெரிய வேதனையைத் தரும்.

"உன்னிடம் உள்ள கோபம் எனும் விஷத்தை அழித்துவிடு. அழிக்காவிட்டால், உன்னை ஒரு விஷச் செடி போலக் கருதி மக்கள் உன்னைக் கண்டு அஞ்சுவார்கள்; வெறுப்பார்கள் ; உன்னை அணுகமாட்டார்கள்."

"மனிதர்கள் கொடியவர்களாகவோ , கொடூரமானவர்களாகவோ இருக்கக் கூடாது. கோபம் ஒருவனைக் கொடூரச் செயல்களைச் செய்யும் கொடியவனாக்கும். கோபக்காரன் தன்னை ஈன்ற தாய்க்கும் தீங்கு செய்வான்; தந்தைக்கும் தீங்கு செய்வான்; சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும், மனைவி மக்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தீங்கு செய்வான்."

"பிறருக்குத் தீங்கு செய்பவன், இங்கும் வெறுக்கப்படுவான்;

உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக நரகத்தில் தண்டிக்கப்படுவான்.

"மனிதர்கள் அனுதாபம் உள்ளவர்களாகவும் நற்செயல்கள் செய்பவர்களாகவும் இருந்தால், நிச்சயமாக நரகத்திற்கும் , நரகலோகத் தண்டனைக்கும், அஞ்ச வேண்டியதில்லை."

இந்த ஓர் உபதேசமே இளவரசனின் செருக்கை அடக்கியது. அவனிடமிருந்த கர்வமும், சுய நலமும் அவனை விட்டு விலகின. அவன் உள்ளம் அன்பையும், அனுதாபத்தையும் நாடியது. அன்றிலிருந்து அவன் எவரையும் திட்டுவதுமில்லை, அடிப்பதுமில்லை.

இந்த இளவரசனைப் போல் நாமும் சினத்தைத் "தீயது" என உணர்ந்து; சினம் நமக்கும் பிறருக்கும் துன்பத்தை ஏற்படுத்தும், என உணர்ந்து; அதன் மேல், அதை விட்டுவிட வேண்டும்.

---

## 2. நாம் ஏன் கோபம் கொள்கிறோம்

வேண்டுமென்றோ, திட்டமிட்டோ அல்லது முன் யோசனையுடனோ, எவரும் சினம் கொள்வதில்லை. அதாவது, “நான் சினம் கொள்ள வேண்டும் என எவரும், திட்டமிட்டோ, வேண்டுமென்றோ அல்லது முன் யோசனையுடனோ சினம் கொள்வதில்லை.

முன்னறிவிப்பின்றி, முன்னெச்சரிக்கையின்றி, திடீரெனச் சினம் மனத்தில் தோன்றும். திடீரெனச் சினம் மனத்தில் எழுந்த போதிலும், அது தானாகவே, தன்னிச்சையாகவே, காரணமின்றி எழுவதில்லை.ஒருவர் சினம் கொள்கிறார் என்றால், அவர் சினம் கொள்வதற்குக் காரணங்கள் உண்டு.

உதாரணத்திற்கு, ஒருவர் தனக்கு ஒவ்வாத உணவை உண்டாரென்றால், அதன் காரணமாக அவருக்கு வயிற்று வலி ஏற்படும். வயிற்று வலி தானாகவே, தன்னிச்சையாகவே காரணமின்றி எழவில்லை. அவர் தனக்கு ஒவ்வாத உணவை உண்டதால், அதன் காரணமாக அவருக்கு

வயிற்று வலி ஏற்பட்டது.

அதுபோல் தான் சினமும். சினம் தானாகவே, தன்னிச்சையாகவே, காரணம் இல்லாமல் எழுவதில்லை. ஒருவர் சினம் கொள்வதற்கான காரணங்கள் சம்பவிக்கும்போது, அதன் காரணமாக அவர் மனத்தில் சினம் எழும்.

வயிற்று வலியை எவரும் விரும்புவதில்லை. அது வேதனை தரும். தக்க மருந்து கொண்டு அதைக் குணப்படுத்த வேண்டும்.

அதுபோல் தான் சினமும். சினத்தினாலேயே துன்பங்கள் தோன்றும். ஆகவே, ஒருவர் சினம் கொள்ளக் காரணங்கள் இருந்த போதிலும், சினத்தினாலேயே துன்பங்கள் தோன்றும் என்பதால், சினத்தை அடக்கிக் காக்க வேண்டும். காக்காவிட்டால், அது தனக்கும் மற்றவருக்கும் துன்பம் செய்யும்.

நம் மனத்தில் ஏன் கோபம் எழுகின்றது? பிறர் செய்யும் குற்றம் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும். அதாவது, நாம் கோபம் கொள்வதற்குக் காரணமாகிய குற்றத்தை ஒருவர் செய்தாரென்றால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்.

உதாரணத்திற்கு, செய்யாத ஒரு குற்றத்தைச் செய்ததாக நம்மீது ஒருவர் குற்றம் சாட்டி குறை கூறினார் என்றால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்; பிறர் நம்மைப் பழித்து இகழ்ந்தால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்; நம்மை ஒருவர் அவமானப் படுத்தினால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்; ஆணவக்காரனின் அடாத செயலைக் காணும்போது, அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்.

தவற்றைக் கண்டித்து நாம் அறிவுரை கூறிய போதிலும், ஒருவன் மீண்டும் மீண்டும் அத்தவற்றைச் செய்தானென்றால் , அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்; குற்றம் செய்தும், தன் செயல் நியாயமானதே என ஒருவன் விவாதித்தானென்றால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும். நம்மை ஒருவர் எப்போதும் குறை கூறிக் கொண்டிருந்தால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்.

அதிகாரம் பெற்றோர் தம் அதிகாரத்தைப் பிரயோகித்து, நமக்குத்

தீங்கிழைத்தால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்; நம் அன்பிற்குரியோருக்கு ஒருவன் தீங்கிழைத்தானென்றால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்; நாம் ஆசையுடன் பாதுகாத்து வந்த ஒரு பொருளை ஒருவன் அழித்தானென்றால், அதன் காரணமாக நம் மனத்தில் கோபம் எழும்;

நம் மனத்தில் கோபம் எழுவதற்கு இன்னும் இவை போல் பல காரணங்கள் உண்டு. பிறர் செய்யும் குற்றம் அல்லத தீங்கு காரணமாக நம் மனத்தில் கோபம் எழுந்த போதிலும், கோபத்தில் அறிவிழந்து தீமை செய்வோமென்பதால், கோபத்தை அடக்கிக் காப்பது அறிவுடைமையாகும்.

மற்றவர் செய்த ஒரு குற்றம் காரணமாக, அல்லது மற்றவர் தீங்கிழைத்ததன் காரணமாக, நம் மனத்தில் கோபம் எழுவதில் ஓரளவு நியாயம் உண்டு. அதாவது, ஒருவர் நமக்குத் தீங்கிழைத்தால், அதன் காரணமாக நாம் கோபம் கொள்வதில் ஓரளவு நியாயம் உண்டு. இவ்வகையான கோபத்தை நியாயமான கோபம் என்று கூடக் கூறலாம். ஏன்? மற்றவர் செய்த குற்றம் காரணமாக, அல்லது மற்றவர் இழைத்த தீங்கின் காரணமாக, நாம் துயரப்பட நேரிடும் என்பதால், நம் கோபத்தில் நியாயம் உண்டு.

உதாரணத்திற்கு, நம்மைப்பற்றி ஒருவர் புறம் பேசுவதாகக் கொள்வோம். நம்மைப்பற்றிப் புறம் பேசுபவரின் மேல் நாம் கோபம் கொள்வதில் ஓரளவு நியாயம் உண்டு. ஏன்? புறம் பேசி அவர் நமக்குத் தீங்கிழைப்பதால், நாம் கோபம் கொள்வதில் ஓரளவு நியாயம் உண்டு.

நாம் கோபம் கொள்வதில் நியாயம் இருந்த போதிலும், கோபத்தை அடக்கிக் காப்பதே அறிவுடைமையாகும். ஏன்? நாம் கோபம் கொண்டோமென்றால், கோபத்தினால் அறிவிழந்து தீமை செய்து, அதன் காரணமாகவே துன்பப்பட நேரிடும். நியாயமான கோபமும் துன்பத்தையே ஏற்படுத்தும் என்பதால், அதையும் அடக்கிக் காப்பதே அறிவுடைமையாகும்.

சிலருடைய கோபத்தில் நியாயம் இருக்காது. அவர்களுடைய கோபத்தில் அநியாயமே மிகுந்திருக்கும்.

உதாரணமாக, சிலரிடம் தற்பெருமை மிகுந்திருக்கும். பிறருடைய சிறப்புகளைப் புகழ்ந்துரைப்பதை இவர்களால் சகித்துக் கொள்ள முடியாது.

சினம் கொண்டு தங்களின் அதிருப்தியைக் காட்டுவார்கள்.

சில பெண்களிடம் தாங்கள் அழகி என்ற பெருமை மேலோங்கியிருக்கும்; கர்வம் இருக்கும். இத்தகைய பெண்களிடம் மற்றொரு பெண்ணின் நற்குணங்களையும், நற்பண்புகளையும் புகழ்ந்து பேசினால், சகித்துக் கொள்ள முடியாமல், சினம் கொண்டு, தம் அதிருப்தியைக் காட்டுவார்கள். இவர்கள் இவ்வாறு கோபம் கொள்வதில் நியாயமில்லை.

சிலரிடம், "நான் நல்லவன்" அல்லது " நான் பக்தன்" அல்லது "நான் திறமைசாலி" என்பன போன்ற பெருமைகள் மிகுந்திருக்கும். இவர்களிடம் இவர்களைப்பற்றிப் புகழ்ந்து பேசினால் மகிழ்ந்து திருப்தியைக் காண்பிப்பார்கள். ஆனால் வேறொருவரின் சிறப்புகளை இவர்களிடம் புகழ்ந்து பேசினால், பொறுத்துக்கொள்ள முடியாமல், சினம் கொண்டு தங்களுடைய அதிருப்தியைக் காட்டுவார்கள். இவர்கள் கோபம் கொள்வதில் நியாயம் இல்லை.

சிலர் தமக்குப் “பிடிக்கவில்லை" அல்லது “தமக்கு விருப்பமில்லை," அல்லது தாம் விரும்பவில்லை என்ற ஒரே காரணத்தினால், அற்ப விஷயங்களுக்கெல்லாம் கோபம் கொள்வார்கள். அதாவது, மற்றவர் தவறு செய்யாத போதிலும், தனக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினால், கோபம் கொள்வார்கள்.

உதாரணத்திற்கு, சில கணவன்மார்கள், மனைவி சமைத்த உணவு தனக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினால், மனைவியிடம் கோபத்தைக் காட்டுவார்கள். தமக்குப் பிடிக்காத சங்கீதத்தை மற்றவர் ரசிப்பதைக் கண்டு சிலர் கோபம் கொள்வார்கள்; மற்றவர் உடுத்தியுள்ள ஆடை தமக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தினால் சிலர் கோபம் கொள்வார்கள். இவர்கள் கோபத்தில் நியாயம் இல்லை.

சிலர் கருத்து வேற்றுமை காரணமாகச் சினம் கொள்வார்கள். தம் கருத்தே சரியானது எனக் கருதும் இவர்கள், தம் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் சினத்தைக் காட்டுவார்கள். உதாரணத்திற்கு, சில மத வெறியர்கள், தம் கருத்துக்கு மாறுபட்ட கருத்துகளைப் பொறுத்துக் கொள்வதில்லை. தம் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைப் பின்பற்றுவோரிடம் பகைமை பாராட்டுவர். அவர்கள் மீத சினம் கொண்டு அவர்களுக்குத் தீங்கிழைப்பார்கள்.

சிலரிடம் கொடிய சுபாவம் இருக்கும். இவர்களின் மனத்தில் ஆணவமும், கர்வமும், சினமும், வெறுப்பும், பகைமையும் இருக்கும். இத்தகையோர் காரணமில்லாமலே சினம் கொள்வார்கள அல்லது அற்ப விஷயங்களையெல்லாம் தவறாக ஏற்றுக் கொண்டு சினம் கொள்வார்கள். இவர்கள் எல்லாரிடமும் தம் சினத்தைக் காட்டுவார்கள். நியாயமான கோபமாயினும், நியாயமற்ற கோபமாயினும் கோபம் கொடியதே!

## 2.1 துறவியும் படகோட்டியும்

சிலர், நல்லோர் கூறும் நல்லுபதேசத்தைத் தப்பாகக் கொண்டு உள்ளத்தில் குரோதங் கொள்வார்கள். அதன் காரணமாகச் சினம் கொள்வார்கள். சினம் கொண்டு, தமக்கு அறிவுரை கூறிய நல்லோருக்குத் தீங்கிழைப்பார்கள். ஒரு மிருகம் தங்கத்தின் மதிப்பை உணர்வதில்லை. அதுபோல், இத்தகையோர் நல்லோர் கூறும் நல்லுபதேசத்தின் மதிப்பை உணர்வதில்லை. மாறாகத் தமக்கு அறிவுரை கூறிய நல்லோரின் மேல் சினம் கொள்வார்கள் ; தீங்கிழைப்பார்கள். இதை விளக்ககுவதற்குப் பகவான் புத்தர் கீழ் வரும் கதையைக் கூறினார்:

முன்பு ஒரு காலத்தில், இமய மலைப் பிரதேசத்தில் ஒரு துறவி வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சமயம் பெனாரஸ் பட்டணத்திற்கு வந்தார். அப்பட்டணத்தில் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்தார். அவர் பிச்சை எடுப்பதை அந்நாட்டு மன்னர் தம் அரண்மனையிலிருந்து கவனித்தார். கையில் பிச்சைத் தட்டை ஏந்தி, அடக்கத்துடன் நடந்து சென்ற துறவியைக் கண்டதும், மன்னருக்கு அத்துறவியின் மேல் மதிப்பும், மரியாதையும் ஏற்பட்டது. .

மன்னர் தம் ஏவலாட்களை அனுப்பி, துறவியை அழைத்து வந்து, அரண்மனைப் பூங்காவனத்தில் தங்குமாறு வேண்டிக் கொண்டார். துறவியும் மன்னரின் வேண்டுகோளை ஏற்றுப் பூங்காவனத்தில் தங்கினார். மன்னரும் அன்றாடம் துறவியிடம் சென்று, அவர் கூறும் உபதேசங்களைக் கேட்டு வந்தார்.

துறவி ஒவ்வோர் தடவையும் உபதேசம் செய்தபின், இப்படியும் மன்னருக்கு அறிவுரை கூறுவார்.

*மன்னா ஒருபோதும் சினம் கொள்ளாதே;*

*மக்களை ஆளும் மன்னா! ஒருபோதும் சினம் கொள்ளாதே,*

*சினம் கொள்வோரிடமும் ஒருபோதும் சினம் கொள்ளாதே,*

*சினத்தைச் சினமின்மையால்தான் வெல்ல முடியும்,*

*கிராமத்திலும், காட்டிலும், கடலிலும், தரையிலும், எங்கிருந்தாலும்*

*மக்களை ஆளும் மன்னா! ஒருபோதும் சினம் கொள்ளாதே!*

துறவியின் உபதேசத்தைச் செவியுற்ற மன்னர் மிகவும் மகிழ்ந்து, ஒரு கிராமத்தைத் துறவிக்குக் காணிக்கையாக வழங்கினார். துறவி வேண்டாமென மறுத்துவிட்டார்.

சில காலம் கழித்து, “நாம் நீண்ட காலம் இங்கு தங்கிவிட்டோம்” என எண்ணிய துறவி , தோட்டக்காரனிடம் "நான் நீண்ட காலம் இங்கு தங்கிவிட்டேன். நாட்டின் மற்ற பகுதிகளில் பயணம் செய்ய விரும்புகின்றேன். மீண்டும் வருவேன் என்று மன்னரிடம் சொல்லிவிடு" எனக்கூறி பூங்காவனத்திலிருந்து வெளியேறினார்.

பூங்காவனத்தை விட்டு வெளியேறியவர், கங்கை நதிக்கு வந்தார். அங்கு ஒரு படகோட்டி இருந்தான். அவன் பெரியோரின் நற்பண்புகளை அறியாதவன். தன் குறைபாடுகளையும் உணராதவன். முன் யோசனை இல்லாதவன். நன்மை, தீமைகளைச் சீர் தூக்கிப் பார்க்கும் ஆற்றல் இல்லாதவன்.

நதியைக் கடக்க வருவோரிடம் இக்கரையிலேயே இவன் கூலியைக் கேட்பதில்லை; கூலியைத் தெளிவாகப் பேசுவதில்லை. அடுத்த கரையை அடைந்தபின், பயணிகளிடம் அவர்கள் கொடுக்கும் கூலி போதாதென்று சண்டை, சச்சரவு செய்வான். சினம் கொண்டு திட்டி ஏசுவான்.

இவனுடைய இழிவான குணத்தைக் கண்டு, சில பயணிகள் இவன் மேல் சினம் கொண்டு, இவனோடு சண்டை, சச்சரவு செய்வதுண்டு; சில சமயங்களில், இது கைகலப்பில் முடிவதும் உண்டு.

இதன் காரணமாக அன்றாடம் இவன் சம்பாதிப்பதெல்லாம் சண்டையும், சச்சரவும் அடியும்தான். இவன் அத்தகையதோர் அயோக்கியன். ஆனால் இவன் தன் மடைமையை உணர்ந்தானில்லை.

நதிக்கரைக்கு வந்த துறவி அந்தப் படகோட்டியிடம் "நண்பரே, என்னை அடுத்த கரைக்குக் கொண்டு செல்லுங்கள் " என்று கூறினார்.

படகோட்டி அவரிடம், " சந்நியாசி, எனக்கு என்ன கூலி கொடுப்பாய் “ எனக் கேட்டான்.

துறவி படகோட்டியிடம், “நண்பரே, நான் உனக்கு செல்வத்தைப் பெருக்கும் வழியையும்; வாழ்வில் சுகத்தையும் நற்குணங்களையும் பெறும் வழியையும் கூறுகிறேன் " எனக் கூறினார்.

"இந்தச் சந்நியாசி நமக்கு ஏதேனும் கொடுப்பார். அடுத்த கரை சென்றதும் இவரிடம் இன்னும் அதிகமாகவே பெறலாம் என எண்ணிக் கொண்டு, துறவியை அடுத்த கரைக்குக் கொண்டு வந்தான்.

அடுத்த கரையை அடைந்ததும் துறவியிடம், "என் கூலியைக் கொடுங்கள்” எனக் கேட்டான்.

"சரி நண்பரே" எனக் கூறிய துறவி, அவனுக்குச் செல்வத்தைப் பெருக்கும் வழியை முதலில் கூறினார்.

"நதியைக் கடப்பதற்கு முன், இக்கரையிலேயே உன் கூலியைக் கேள். ஒருபோதும் அடுத்த கரைக்குச் சென்ற பின் உன் கூலியைக் கேட்காதே."

“உன் படகில் நீ ஏற்றிச் செல்லும் மக்களின் மனம் மாறும். கடக்குமுன் ஒரு மனம்; கடந்த பின் ஒரு மனம்."

இதைக் கேட்ட படகோட்டி, "இவர் நமக்கு அறிவுரை கூறுகிறார் போலிருக்கிறது. அடுத்து, நமக்கு ஏதேனும் கொடுப்பார்" என எண்ணிக் கொண்டான்.

துறவி தொடர்ந்து, “நண்பரே , இதுதான் உன் செல்வத்தைப் பெருக்கும் வழி. அடுத்து, வாழ்வில் சுகத்தையும், 8 நற்குணங்களையும் பெறும் வழியைக் கேள்" எனக்கூறி,

“கிராமத்திலும், காட்டிலும், கடலிலும், கரையிலும் எங்கிருந்தாலும் என் அருமைப் படகோட்டியே! ஒரு போதும் சினம் கொள்ளாதே!”

“நான் கூறும் இந்த அறிவுரையை எப்பொழுதும் மறக்காதே!"

எனப் படகோட்டிக்குச் செல்வத்தைப் பெருக்கும் வழியையும், வாழ்வில் சுகத்தையும் நற்குணங்களையும் பெறும் வழியையும் கூறினார்.

பிறகு, “நான் உன்னிடம் கூறியது போல், செல்வத்தைப் பெருக்கும் வழியையும், வாழ்வில் சுகத்தையும், நற்குணங்களையும் பெறும் வழியையும் உனக்குக் கூறிவிட்டேன் " என்றார்.

ஆனால், அந்த மடையனோ, அவர் கூறிய அறிவுரையை ஒரு பொருட்டாகக் கருதவில்லை; அதன் மதிப்பை உணரவில்லை.

"சந்நியாசி, இதுதானா நீ எனக்குக் கொடுக்கும் கூலி" எனக் கேட்டான்.

"ஆம் நண்பரே!" என்று துறவி பதிலளித்தார்.

"எனக்கு இது தேவையில்லை. வேறு ஏதேனும் கொடு” என்றான் படகோட்டி.

"நண்பரே, இதைத் தவிற என்னிடம் வேறெதுவும் இல்லை."

இதைக் கேட்ட படகோட்டி கடும் சினம் கொண்டான்.

"அப்படி என்றால் , என் படகில் ஏன் ஏறினாய்," எனக்கூறித் துறவியைக் கீழே தள்ளி, அவர் நெஞ்சில் ஏறியமர்ந்து, கடும் சொற்களால் திட்டிக் கொண்டு, அவரை முகத்திலும், வாயிலும் மாறி மாறிக் குத்தினான்.

அச்சமயம் அவன் மனைவி அவனுக்குச் உணவு எடுத்துக் கொண்டு அங்கு வந்தாள். தன் கணவன் துறவியைத் தாக்குவதைக் கண்ட அவள், "ஐயோ! அவர் ஒரு துறவி; அவரை அடிக்காதீர்கள்," எனக் கணவனைத் தடுத்தாள். இதைக் கேட்ட அந்த மூர்க்கன் இன்னும் ஆத்திரமடைந்தான். "இந்தக் கபட சந்நியாசிக்கு நீ பரிந்து பேசுகிறாயா,” எனக் குதித்தெழுந்து, மனைவியை அடித்துக் கீழே தள்ளிக் காலால் உதைத்தான். அவள் உணவு கொண்டு வந்த பாத்திரம் கீழே விழுந்து உடைந்து உணவுப் பொருள்கள்

யாவும் சிதறின. அவன் அடித்த அடியில் மனைவிக்குக் கருச்சிதைவு ஏற்பட்டு, அவள் கருப்பையிலிருந்த குழந்தை இறந்தது.

அங்குக்கூடிய மக்கள், "கொலைகாரப் பாவி" என அவனைத் திட்டி, கயிற்றால் கட்டி, மன்னரிடம் இழுத்துச் சென்றார்கள். மன்னனும் விசாரித்துத் தகுந்த தண்டனை வழங்கினான்.

இந்தக் கதையைக் கூறிய பகவான் புத்தர், இப்படி முடித்தார்:

துறவி மன்னருக்கு அறிவுரை கூறிய போது, மன்னன் மகிழ்ந்து துறவிக்கு ஒரு கிராமத்தையே காணிக்கையாக வழங்கினான். அதே அறிவுரையை ஒரு முட்டாள் படகோட்டிக்குக் கூறிய போது, துறவிக்குக் குத்தும், உதையும்தான் கிடைத்தது. ஆகவே , அறிவுரையும் தகுதியுடையோருக்குத்தான் கூற வேண்டும்.

தங்கத்தின் மதிப்பை உணராத மிருகத்தைப் போல் அந்த மடையன் நல்லுபதேசத்தின் மதிப்பை உணரவில்லை.

## 3. சினம் காத்தல்

சிலருடைய கோபத்தில் ஓரளவு நியாயம் இருக்கும், மற்றும் சிலருடைய கோபத்தில் அநியாயமே மிகுந்திருக்கும். எவ்வகையான கோபமாயினும், கோபம் தனக்கும் பிறருக்கும் துன்பத்தையே ஏற்படுத்தும் என்பதால், கோபம் கொடியதே.

கோபம் ஒரு மனிதனை ஆட்கொள்ளுமாயின், அந்தக் கோபம் எனும் தீ அவனையும் சுடும், மற்றவர்களையும் சுடும். அவனுக்கும் துன்பத்தை ஏற்படுத்தும்; மற்றவர்களுக்கும் துன்பத்தை ஏற்படுத்தும். எப்படி? ஒரு மரம் தீப்பிடித்துக்கொள்ளுமாயின், அத்தீயினால் அந்த மரமும் அழியும், அதைச் சார்ந்துள்ள மற்ற மரங்களும் அழியும். அதுபோல்தான் சினமும்.

ஒருவருடைய கோபத்தில் ஓரளவு நியாயம் இருந்த போதிலும், அது ஒரு தீயைப் போல் தன்னையும் சுடும், மற்றவரையும் சுடும். ஒருவரின் கோபத்தில்,

அநியாயமே மிகுந்திருந்த போதிலும், அதுவும் தன்னையும் சுடும், மற்றவரையும் சுடும். நியாயமான கோபமாயினும், நியாயமற்ற கோபமாயினும், அது தனக்கும், மற்றவர்களுக்கும் துன்பத்தையே ஏற்படுத்தும். ஆகவே, தனக்கும் துன்பத்தை ஏற்படுத்தி, மற்றவர்களுக்கும் துன்பத்தை ஏற்படுத்தும் கோபம் கொடியதே!

விறகைப் பற்றிய தீ விறகை அழித்துவிடும். அதுபோல், ஒருவனைப் பற்றிய கோபம் அவனையே அழிக்கும். சினம் கொள்பவன் சினத்தினால் அறிவிழந்து மற்றவருக்குத் தீங்கிழைக்க எண்ணி, தனக்கே தீங்கிழைத்துக் கொள்வான்.

ஆகவே, ஒருவனுடைய மனத்தில் எழும் கோபம், ஒரு பகைவனைப் போல் அவனுள்ளிருந்தே அவனை அழிக்கும் என்கிறார் பகவான் புத்தர்.

கோபம் உள்ளிருந்தே கொல்லும் விரோதி. உள்ளிருந்தே கொல்லும் பகைவன். நமக்குள்ளிருந்தே நம்மைக் கொல்லும் பகைவன். அப்பகைவனுக்கு மனத்தில் இடம் கொடுக்காதீர்கள்.

நம் பகைவர்கள் நமக்குச் செய்ய விரும்பும் கேடுகளை எல்லாம், நம் மனத்தில் எழும் கோபமே நமக்குச் செய்துவிடும். நம் பகைவர்களால் நமக்குக் கேடு செய்ய முடியாவிட்டாலும், அவர்கள் செய்ய விரும்பும் கேடுகளை எல்லாம், நம் மனத்தில் எழும் கோபமே நமக்குச் செய்துவிடும்.

நம் பகைவர்கள் நமக்கு நண்பர்கள் இருப்பதை விரும்புவதில்லை; உறவினர்கள் இருப்பதை விரும்புவதில்லை; பொருள் இருப்பதை விரும்புவதில்லை; புகழ் இருப்பதை விரும்புவதில்லை; தெய்வலோகம் போவதை விரும்புவதில்லை.

நம் பகைவர்களால் நம் நண்பர்களை நம்மிடமிருந்து பிரிக்க முடியாவிட்டாலும்; நம் உறவினர்களை நம்மிடமிருந்து பிரிக்க முடியாவிட்டாலும்; நம் செல்வத்தை நம்மிடமிருந்து அழிக்க முடியாவிட்டாலும்; நம் புகழை அழிக்க முடியாவிட்டாலும்; நம்மை நரகத்திற்குள் தள்ள முடியாவிட்டாலும், நம் மனத்தில் எழும் கோபம் நம்மை நம் நண்பர்களிடமிருந்து பிரித்துவிடும், நம் உறவினர்களிடமிருந்து நம்மைப் பிரித்துவிடும்; நம் செல்வத்தை நம்மிடமிருந்து அழித்துவிடும், நம் புகழை அழித்துவிடும். நம்மை நரகத்தில் தள்ளிவிடும்.

ஆகவே, நம் விரோதி நமக்குச் செய்ய விரும்பும் கேடுகளை எல்லாம் அவனால் அந்தக் கேடுகளை நமக்குச் செய்ய முடியாவிட்டாலும் , நம் மனத்தில் எழும் கோபமே அக்கேடுகளைச் செய்துவிடும்.

கோபம் ஒரு மனிதனை வெல்லுமானால், இருள் அவன் மனத்தை ஆட்கொள்ளும். நல்லனவற்றில் மகிழ்ந்ததுபோல் இப்போது அவன் தீயனவற்றில் மகிழ்வான். பழிக்கு அஞ்சமாட்டான். பாவத்திற்கு அஞ்சமாட்டான். ஆத்திரத்தில் அறிவிழந்து , அறத்தை மறந்து, நல்ல பண்புகளை மறந்து, பிறருக்குக் கேடு செய்வான். தானும் கெடுவான்.

கோபத்தில் அறிவிழந்தவன், தீமைகளைச் செய்து தீய கதிமை அடைவான் என்பதால், தன்னைத் துன்பத்தினின்றும் காக்க விரும்புபவன் தன்னிடம் சினம் தோன்றாமல் காக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்

***தன்னைத்தான் காக்கின் சினங்காக்க; காவாக்கால்***
***தன்னையே கொல்லும் சினம்.***

அதாவது, துன்பத்தினின்றும் தன்னைக் காத்துக் கொள்ள விரும்புபவன் தன்னிடம் சினம் தோன்றாமல் காத்துக்கொள்ள வேண்டும். அப்படி சினம் தோன்றினாலும், சினத்தை அடக்கிக் காக்க வேண்டும் காக்காவிட்டால், மனத்தில் எழும் சினம் ஒரு பகைவனைப் போல் கேடு செய்யும்.

சினம் கொள்பவன் மற்றவருக்குத் தீங்கிழைக்க எண்ணித் தனக்கு தீங்கிழைத்துக் கொள்வான். ஆகவே, உள்ளத்தில் சினம் உள்ளவனுக் வேறு பகை இல்லை. அவனிடம் உள்ள சினமே அவனுக்குப் பகை. சினம் அவனுள்ளிருந்தே அவனை அழிக்கும். இதை அறிந்த அறிவுடையோர் எப்போதெல்லாம் தம் மனத்தில் சினம் தோன்றுகின்றதே அப்போதெல்லாம் அதை அடக்கி ஆள்வர்.

மனத்தில் எழும் கோபத்தை அடக்கிக் காத்தால், அது எப்படி தோன்றியதோ அப்படியே மறைந்துவிடும். காக்காவிட்டால், கோபம் மனத்தைப் பற்றிக் கொள்ளும். மனத்தைப் பற்றிய கோபம் நாவை பற்றிக் கொள்ளும்; உடலையும் பற்றிக் கொள்ளும். சற்று முன் சாதுவ இருந்தவன், இப்போது துஷ்டனாவான் . ஆத்திரத்தில் அறிவிழந்து தீங்கிழைப்பான். அதன் காரணமாகவே தானும் துன்பப்படுவான். ஆக உள்ளத்தைக் கவர்ந்தெழும் சினத்தைக் காத்துக் கொள்ளும் குணம்

சிறந்த குணம்.

நம் மனத்தில் கோபம் எழலாம். ஆனால், சினம் கொண்டு, தீமை செய்யக்கூடாது. அதாவது மனத்தில் சினம் தோன்றுவது குற்றமில்லை. சினம் கொண்டு தீமை செய்வதுதான் குற்றம். மனத்தில் தோன்றிய சினம் நம்மை ஆட்கொள்ளாமல் காத்துக் கொள்ள வேண்டும். ஏன்? மனத்தில் தோன்றிய சினம் நம்மை ஆட்கொண்டால், நாம் கோபம் கொள்வோம். கோபம் அறிவைக் கெடுக்கும். கோபத்தில் அறிவிழந்து தீமை செய்வோம். சினம் கொண்டு தீமை செய்பவன், இங்கும் பிறரால் வெறுக்கப்பட்டு, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் நரகத்தில் துன்புறுவான்.

ஆனால், மனத்தில் சினம் எழும்போது, "நம் மனத்தில் சினம் எழுகின்றது" என நம்மை நாமே எச்சரித்து, நிதான உணர்வினால் நம்மைக் காத்தோமென்றால், அது எப்படித் தோன்றியதோ, அப்படியே மறைந்துவிடும். சீறி எழுந்த நாகத்தின் நச்சுப் பல்லைப் பிடுங்கிவிட்டது போல் அடங்கிவிடும்.

பொங்கி எழும் கோபத்தை அணைத்துக் கொள்பவன், சீறி எழும் நாகத்தைப் போல் வெகுண்டெழுந்து தீமை செய்வான். அடக்கியாள்பவன் அதன் நச்சுப் பல்லைப் பிடுங்கிவிட்டான். இனி அது துன்பம் செய்வதில்லை.

நம்மீது ஒருவர் சினம் கொண்டால், பதிலுக்கு நாமும் சினம் கொள்ளக்கூடாது. அப்படியே நம் மனத்தில் சினம் எழுந்தாலும், சினத்தை அடக்கி, சகிப்புத் தன்மையுடன் அமைதி காக்க வேண்டும். இருவரில் ஒருவர் சினம் காத்தால், மற்றவரின் சினமும் தணிந்துவிடும்.

உதாரணத்திற்கு, நம்மை ஒருவர் சினம் கொண்டு திட்டினாரென்றால், நாமும் சினம் கொண்டு பதிலுக்குத் திட்டக்கூடாது. மனத்தில் எழும் சினத்தை அடக்கி, பொறுத்துக் கொள்ள வேண்டும். திட்டுவோரைப் பதிலுக்குத் திட்டுவது அறிவுடைமை ஆகாது. சினத்தை அடக்கி நம் பெருமையைக் காத்துக் கொள்ள வேண்டும். நாம் சினம் காத்தால், மற்றவர் சினமும் தணியும். சினம் தணிந்தபின், மற்றவர் நம் பெருமையை உணர்ந்து, நம்மீது மதிப்பும், மரியாதையும் கொள்வார். நாம் சினம் காத்ததால், நம் பெருமையையும் காத்துக் கொண்டோம். மற்றவரின் சினத்தையும் குணப்படுத்திவிட்டோம்.

ஆனால், நாம் நம் மனத்தில் எழும் சினத்தை அடக்கிக் காக்காமல், சினம் கொண்டு பதிலுக்குத் திட்டினோம் என்றால், அது போராக முடியும். தாழ்ந்தவர் முன் சினத்தால் பெருமையை இழந்து, அவரினும் தாழ்ந்து போவோம். ஆகவே, உள்ளத்தைக் கவர்ந்தெழும் சினத்தைக் காத்துக் கொள்ளும் குணமே சிறந்த குணமாகும்.

மனத்தில் சினம் இருந்தால், சொல்லிலும் சினம் இருக்கும்; சொல்லில் சினம் இருந்தால், மனத்திலும் சினம் இருக்கும்.

மனத்திலும், சொல்லிலும் சினம் இருந்தால், உள்ளத்தில் பகையும், வெறுப்பும், கர்வமும், அகந்தையும், அகங்காரமும், தற்பெருமையும் நிறைந்து இருக்கும். நாவும் கடுஞ்சொற்களைப் பேசும்.

ஆகவே, சினம் கொண்டு பேசுவோர் மனத்திலும் சினம் இருக்கும்; சொல்லிலும் சினம் இருக்கும்; உள்ளத்தில் பகையும், வெறுப்பும், கர்வமும், அகங்காரமும், தற்பெருமையும் நிறைந்திருக்கும். அதன் காரணமாக நாவும் கடுஞ்சொற்களைப் பேசும்.

சினம் கொண்டு பேசுவோர், மற்றவர் குறைகளைப் பேசுவதில் மகிழ்வர்; மற்றவரைக் குறைகூறுவதில் மகிழ்வர்; மற்றவரை நிந்திப்பதில் மகிழ்வர்; மற்றவரை அவமானப் படுத்துவதில் மகிழ்வர்; ஒருவரையொருவர் தோற்கடிப்பதில் மகிழ்வர்.

சினங்கொண்டு பேசுவோர் , ஒருவருக்கொருவர் தீங்கிழைத்துக் கொள்வாரென்பதால், பகவான் புத்தர் , சினம் கொண்டு கடுஞ்சொற்களைப் பேசக்கூடாதென்கிறார்.

எவரிடத்தும் சினங்கொண்டு கடுஞ்சொல் பேசாதீர்கள்.

மற்றவர்களும் கடுஞ்சொல்லால் பதிலுரைப்பார்கள்.

கோபமான பேச்சு துன்பம் தரும்.
பதிலுக்குப் பதில் கடுஞ்சொல் உங்களைத் தாக்கும்.

திருவள்ளுவரும் நாவினால் குற்றம் செய்யாது நம்மை நாம் காத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

## * கோபத்தை வெல்லும் வழி *

***யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்***
***சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.***

நாவைக் காக்க விரும்புவோர் சினம் காக்க வேண்டும்.

தம் சொல்லில் குற்றமில்லாது தம்மைக் காத்துக் கொள்ள விரும்புவோர், சினம் காக்க வேண்டும். காக்காவிட்டால் , கோபத்தினால் அறிவிழந்து, குற்றமான சொற்களைப் பேசி, அதன் காரணமாகவே வருந்தி, வேதனையுறுவார்கள். ஆகவே நாவைக் காக்க விரும்புவோர் சினம் காக்க வேண்டும்.

சிலர் சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் கோபித்துக் கொள்வார்கள்; வெறுப்பைக் காட்டுவார்கள்; சினம் கொண்டு பிறருக்குத் தீங்கு செய்வார்கள். சினம் தணிந்தபின், தம் சினம் நியாயமானதே எனக் காரணங்கள் பல கூறி, பிறர் மீது பழி சுமத்துவார்கள். பிறர் மீது பழி சுமத்தும் இவர்கள் , தங்களிடமும் குற்றம் உண்டு என்பதை உணர்வதில்லை.

உதாரணத்திற்கு, நாம் புறம் பேசாத போதிலும், புறம் பேசியதாக நம்மீது ஒருவர் குற்றம் சுமத்தி, குறை கூறுவதாகக் கொள்வோம். அதன் காரணமாக நாம் சினம் கொண்டு கடுஞ்சொற்களையோ, அல்லது கூச்சலிட்டுச் சண்டை சச்சரவு செய்தோமென்றால் , நாம் குற்றம் செய்தவர்களாகிறோம்.

கடுஞ்சொற்களைப் பேசுவதும், கூச்சலிட்டுச் சண்டை சச்சரவு செய்வதும், குற்றச் செயல்கள் என்பதால், நாம் குற்றம் செய்தவர்களாகிறோம்.

நம்மீது தவறாகக் குற்றம் சாட்டியவரும் குற்றம் செய்துள்ளார். சினம் கொண்டதால் நாமும் குற்றம் செய்துவிட்டோம். இருவருமே குற்றம் செய்தவர்களாகிறோம்.

ஆகவே, பிறர் குற்றம் கண்டு கோபத்தினால் அறிவிழந்து தீமை செய்பவர், தாமும் குற்றம் செய்தவராகிறார்.

ஆனால், இதைச் சிலர் அறிவதில்லை. பிறர் குற்றம் இழைத்ததனால்தான் தாம் சினம் கொண்டதாகவும், தம் சினம்

நியாயமானதே என்றும் பிறர்மீது பழி சுமத்துவார்கள். இவர்களுடைய கூற்றில் நியாயமில்லை. ஏன்?

இவர்கள் சினம் கொண்ட போதிலும், குற்றம் செய்யாதவரை இவர்கள் பக்கம் நியாயம் உண்டு. ஆனால், சினம் கொண்டு தாமும் குற்றச் செயலைச் செய்துவிட்டதால், இவர்கள் கூற்றில் நியாயம் இல்லை.

பிறர் குற்றத்தைக் கண்டனம் செய்பவர் தான் குற்றம் செய்யாது, தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். பிறர் சினத்தைக் கண்டனம் செய்பவர் தன் மனத்தில் எழும் சினத்தை அடக்கி ஆள வேண்டும்.

நாம் செய்த ஒரு குற்றம் காரணமாக நம்மீது ஒருவர் சினம் கொண்டாரென்றால், நாமும் சினம் கொள்ளக்கூடாது. அப்படியே மனத்தில் சினம் எழுந்தாலும், சினத்தை அடக்கி, அமைதி காக்க வேண்டும். இப்போது அவர் சினம் தணியும். அவர் சினம் தணிந்த பின், நம் குற்றத்தை ஒப்புக்கொண்டு, எதனால் குற்றம் செய்தோம் எனும் காரணத்தை விளக்கி, மன்னிப்புக் கேட்டோமென்றால், அவர் தம் சினத்தை எண்ணி வெட்கி நாணுவார்.

சில சமயங்களில் தவிர்க்க இயலாத சூழ்நிலைகளில் நாம் குற்றம் செய்வதுண்டு. உதாரணத்திற்கு, நாம் ஒருவரிடம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அவரைச் சந்திப்பதாக உறுதிமொழி வழங்கி இருப்போம். சந்தர்ப்ப வசமாகவோ அல்லது வேறு ஏதேனும் அசம்பாவிதத்தாலோ நாம் நம் உறுதிமொழியைத் தவறுவதுண்டு.

இதன் காரணமாக மற்றவர் நம்மீது கோபம் கொண்டாரென்றால், நாமும் கோபம் கொள்ளக் கூடாது. அவர் நம்மீது காட்டும் கோபத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். அவர் கோபம் தணிந்த பின், நாம் காரணத்தை விளக்கி, மன்னிப்புக் கேட்டோமென்றால், அவர் தம் பிழையை உணர்வார். இருவர் நட்பிற்கும், நம்பிக்கைக்கும் பங்கம் ஏற்படாது.

மனத்தில் எழும் கோபத்தை காக்காவிட்டால் அதனால் நமக்குத் தீமையே வரும், நன்மையில்லை. மனத்தில் எழும் சினத்தை அடக்கிக் காத்தோம் என்றால், அதனால் நமக்கு நன்மையே வரும், தீமையில்லை.

## * கோபத்தை வெல்லும் வழி *

மனத்தில் எழும் கோபத்தை அடக்கிக் காத்தோம் என்றால், அதன் காரணமாகப் பின்னால் வருந்த நேராது. மனத்தில் எழும் சினத்தை அடக்கிக் காக்காவிட்டால், அதன் காரணமாகவே, பின்னால் வருந்த நேரிடும். எப்படி?

உதாரணத்திற்கு, நாம் குற்றம் செய்யாத போதிலும், குற்றம் செய்ததாக நம்மீது ஒருவர் குற்றம் சுமத்தி, குறை கூறுவதாகக் கொள்வோம் "குற்றம் செய்யாத நம்மீது குற்றம் சுமத்தி, குறை கூறுகிறாரே" என எண்ணி நாம் சினம் கொண்டோமென்றால், சினம் நம்மை ஆட்கொள்ளும். சினம் மனத்தை ஆட்கொண்டால் அறிவு கெடும். அறிவு கெடின், அறத்தையும், நற்பண்புகளையும், நல்லொழுக்க நெறிகளையும் மறப்போம். நிதானம் இழப்போம். உணர்ச்சி வசப்படுவோம்.

கர்வமும், அகந்தையும், ஆணவமும், மனக் கசப்பும், வெறுப்பும், பகைமையும், குரோதமும் மனத்தை ஆட்கொள்ளும். ஆத்திரத்தில் அறிவிழப்போம். கடுஞ்சொற்களைப் பேசுவோம்; இகழ்ந்து பேசுவோம்; பழித்துப் பேசுவோம்; சண்டை சச்சரவு செய்வோம்; தகாத செயல்களைச் செய்வோம் ; மற்றவருக்குத் தீங்கிழைப்பதில் மகிழ்வோம்; இவ்வாறெல்லாம் பிறருக்குத் தீங்கிழைத்து, நாமும் கெடுவோம்.

எப்படிக் கெட்டோம்? மனத்தில் எழுந்த கோபத்தை அடக்கிக் காக்காததால், ஆத்திரத்தில் அறிவிழந்து, தீமை செய்து கெட்டோம்.

கோபத்தினால் அறிவிழந்து நாம் தீமை செய்யும்போது, நாம் குற்றம் செய்தவர்களாகிறோம். கோபம் தணிந்தபின், கோபத்தினால் அறிவிழந்து செய்த குற்றங்களை எண்ணி, வருந்தி வேதனைப் படுவோம்.

ஆகவே, குற்றம் செய்யாத நம்மீது , ஒருவர் குற்றம் சுமத்தி குறை கூறும்போது, அதன் காரணமாக மனத்தில் எழும் கோபத்தை நாம் அடக்கிக் காக்காவிட்டால் , நம்மிடம் நியாயம் இருந்த போதிலும் , ஆத்திரத்தில் அறிவிழந்து, தீமை செய்து கெடுவோம்.

ஆனால், குற்றம் செய்யாத நம்மீது ஒருவர் குற்றம் சுமத்திக் குறை கூறும்போது, மனத்தில் எழும் கோபத்தை அடக்கிக் காத்தோமென்றால், கோபம் நம்மை ஆட்கொள்ளாது. எழுந்த கோபத்தை நாம் அடக்கிக் காத்து விட்டதால், நாம் ஆத்திரமடைய மாட்டோம்.

எழுந்த கோபத்தை நாம் அடக்கிக் காத்துவிட்டதால், நம்மிடம் நிதானம் இருக்கும்; அறிவுத் தெளிவு இருக்கும்; சிந்தனைத் தெளிவு இருக்கும்; பொறுமை இருக்கும்; நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றல் இருக்கும். எவ்விதத் தீங்கையும் செய்யமாட்டோம். ஏன்? இப்போது நாம் அறிவைக் கெடுக்கும் கோபத்தைக் அடக்கிக் காத்துவிட்டோம்.

மனத்தில் எழுந்த கோபத்தை நாம் காத்து விட்டதால், தீமை செய்வதற்குக் காரணமாகிய கர்வமும், அகந்தையும், ஆணவமும், வெறுப்பும், மனக்கசப்பும் , பகைமையும், குரோதமும் நம் மனத்தை ஆட்கொள்ளாது. அறிவிழக்க மாட்டோம். தீமை செய்ய மாட்டோம். ஏன்? அறிவைக் கெடுக்கும் கோபத்தை அடக்கிக் காத்துவிட்டோம்.

சினத்தைக் காப்பதால் மேலும் ஒரு நன்மையையும் அடையலாம். அறிவைக் கெடுக்கும் சினத்தைக் காத்ததால், நம்மிடம் பொறுமையும், அறிவுத் தெளிவும், நிதானமும் இருக்கும். "இவர் தீர விசாரிக்காமல் நம்மைக் குறை கூறுகிறார், " அல்லது, "இவர் உள்ளத்தில் பகை கொண்டு நம்மைக் குறை கூறுகிறார்." என அறிந்து, நம்மைக் குறை கூறியவரிடம், ஐயா தாங்கள் கூறும் குற்றம் என்னிடம் இல்லை." என விளக்கி , நம் பெருமையையும் புகழையும் காத்துக் கொள்ளலாம். நம்மைக் குறை கூறியவரும் தம் தவற்றை உணர்வார்.

சினத்தைக் காத்தால் நம்மையும் காத்துக் கொண்டோம்; மற்றவரும் தம் தவற்றைக் உணர்ந்தார். சினத்தைக் காத்திராவிட்டால், நம்மிடம் நியாயம் இருந்த போதிலும், கோபத்தினால் அறிவிழந்து, குற்றம் செய்து பெருமையை இழந்திருப்போம்.

ஆகவே, சினத்தைக் காப்பதால், பின்னால் வருந்த நேராது. சினத்தைக் காக்காவிட்டால் பின்னால் வருந்த நேரிடும்.

நமக்கு வி ருப்பமில்லாத, ஏற்றதல்லாத, பொருந்தாத, அல்லது கசப்பான பேச்சு நம்மைத் தாக்கும்போது, மனத்தில் எழும் சினத்தை அடக்கிக் காக்க வேண்டும். இவ்வகையின பேச்சு தம்மைத் தாக்காதவரை சிலரிடம் அமைதியும், சாந்தமும், அடக்கமும், வணக்கமும், அன்பும், அறமும் இருக்கும்.

ஆனால், இவ்வகையான பேச்சு தம்மைத் தாக்கும்போது, சினம் கொள்வார்கள்; சிடு சிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவார்கள்; வெகுண்டு எழுவார்கள். சற்று முன் சாதுவாக இருந்த இவர்கள்

துன்மார்க்கர்களாக மாறுவார்கள்.

தமக்கு விருப்பமில்லாத, ஏற்றதல்லாத, பொருந்தாத, கசப்பான பேச்சு, தன்னைத் தாக்கும்போது, எவரொருவர் மனத்தில் எழும் கோபத்தை அடக்கி, தன் பொறுமையைக் காக்கின்றாரோ, அவரே சாதுவானவர். அவரே சினம் காப்பவர்.

ஒருவர் நம்மைப் பழித்துப் பேசியதன் காரணமாக நாம் சினம் கொண்டு, பதிலுக்குப் பழித்துப் பேசினோம் என்றால், நாமும் பழிக்கும் குற்றத்தைச் செய்தவராகிறோம். பழித்தவரும், பதிலுக்குப் பழித்துக் கூறுபவரும் இருவருமே குற்றம் செய்தவர்களாகிறார்கள்.

பிறர் தம்மைத் தாழ்ந்துரைக்கும் கடுஞ்சொல் தமக்குப் பெரும் வேதனையைத் தந்த போதிலும், அவ்வேதனையைப் பொறுத்துக் கொண்டு பதிலுக்கு இகழாதிருப்பதே உயர்ந்தோர் கொள்கை.

கடித்த நாயை எவரும் துரத்திச் சென்று கடிப்பதில்லை. மாடு முட்டினால் திருப்பி அதனை முட்டுவாரில்லை. அதுபோல், அறிவிலார் தம்மைப் பழித்துக் கூறினால், அறிவுடையோர் அதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். தாமும் சினம் கொண்டு பழித்துக் கூறக்கூடாது. மூடர்கள் நம்மைப் பழித்துக் கூறினால், அதற்காக நாமும் சினங்கொண்டு பழிக்கக் கூடாது. நம்மை இகழ்வோரை பதிலுக்கு நாமும் இகழ்வது அறிவுடைமையாகாது.

தலைமேல் ஓர் ஈ அமர்ந்தால், அதன் மேல் சினம் கொண்டு அறைபவன், தன்னையே அறைந்து கொள்வான். அதுபோல் தம்மை இகழ்வோரைச் சினம் கொண்டு பதிலுக்கு இகழ்பவர், தம் பெருமையைத் தாமே கெடுத்துக் கொள்வார்.

தம்மை இகழ்வோரைச் சினம் கொண்டு பதிலுக்கு இகழ்பவர், இருவரிலும் இவரே தாழ்ந்தவர். தம்மை இகழ்வோரைச் சினம் கொண்டு பதிலுக்கு இகழாதவர், இருவரிலும் இவரே உயர்ந்தவர்.

தம்மை ஒருவர் சினம் கொண்டு இகழும்போது, பதிலுக்குச் சினம் கொண்டு இகழாமல் பொறுத்துக் கொள்வோரை, மடையர் என்றும், கோழை என்றும் கூறுவர் சிலர். அறம் அறியாத மக்களே இவரை இவ்வாறு பழிப்பர். அறம் அறிந்தோரே இவர் குணத்தைப் புகழ்ந்துரைப்பர்.

சினத்தை வல்லமை எனக் கருதி, அதில் பெருமை கொள்ளும் அறிவிலாரே, சினம் காத்துப் பொறுத்துப் போவோரைக் கோழை என்றும், மடையன் என்றும் பழிப்பர். சினம் தன்னையே கொல்லும் என அறிந்த அறிவுடையோரே, சினம் காத்துப் பொறுத்துப் போவோரின் குணத்தைப் போற்றுவர்.

உடல் பலமும், பொருள் பலமும் உள்ள ஒருவரின் கோபமும் பலமாகத்தான் இருக்கும். பலமான கோபத்தில் இவன் செய்யும் பாவங்களும் பெரியதாகத்தான் இருக்கும். ஆகவே, எளியோர் மீது வலியோர் தம் சினத்தைக் காட்டக்கூடாது.

வலியோர் சினம் கொண்டால் , எளியோருக்குப் பெரும் துன்பம் செய்வாரென்பதால் , எளியோரும் வலியோரிடம் தம் சினத்தைக் காட்டக்கூடாது.

ஆகவே, திருவள்ளுவர் கூறியுள்ளதுபோல், எவரிடமும் சினம் கொள்ளாது, சி னத்தை அடக்கி ஆள வேண்டும். ஏனெனின், தனக்கும் பிறருக்கும் அந்தச் சினத்தினாலேயே துன்பங்கள் தோன்றும்.

***மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய***
***பிறத்தல் அதனான் வரும்.***

# 3.1 நரகமும் தெய்வலோகமும் உண்டா?

ஒருமுறை ஜப்பானிய தியான குரு ஹாக்குய்ன் என்பவரைக் காண ஒர் இராணுவ அதிகாரி வந்தார். இவர் ஒரு படைத் தளபதி. வந்த இராணுவ அதிகாரி இவ்வாறு கேட்டார்:

"உண்மையில் நரகலோகம், தெய்வலோகம் உண்டா?"

"தாங்கள் யார் ? " என்று ஹாக்குய்ன் கேட்டார்.

"நான் ஒரு தளபதி" என்று இராணுவ அதிகாரி பதிலளித்தார்.

இதைக் கேட்ட ஹாக்குய்ன் பலமாகச் சிரித்தார். பின், "எந்த மடையன் உன்னைத் தளபதியாக நியமித்தான்? உன்னைப் பார்த்தால் ஒரு கசாப்புக்காரன் போல் தோன்றுகிறாய்!" என்றார்.

இராணுவ அதிகாரி தான் ஒரு தளபதி என்று கூறியதும், அதைக் கேட்ட ஹாக்குய்ன் கேவலமாகச் சிரித்ததையும், தான் ஒரு கசாப்புக்காரன் போல் தோற்றமளிப்பதாகக் கூறியதையும், தான் தளபதிப் பதவிக்குத் தகுதியற்றவன் என்றதையும் கேட்ட தளபதிக்குச் சினம் பொங்கி எழுந்தது; ஆவேசம் கொண்டார்; துன்மார்க்கரானார்.

ஆத்திரத்தில் அறிவிழந்து, தன்னை இகழ்ந்தவனைத் தண்டிக்க வேண்டும் என்ற வெறியில், என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்று அறியாமல்,

"என்ன சொன்னாய்! உன்னைத் துண்டுத் துண்டாக வெட்டுவேன்" எனக் கத்தியவர், வாளை உருவி, ஹாக்குய்னை வெட்டுவதற்கு ஓங்கினார்.

தளபதி சினம் கொண்டதையும், சினத்தினால் அறிவிழந்ததையும், அறிவிழந்து பாவச் செயலைச் செய்யவிருப்பதையும் , பார்த்த

ஹாக்குய்ன்,

"இப்போது நரகத்தின் வாயில் திறக்கின்றது" எனக்கூறினார்."

அக்கணமே தளபதிக்கு “நரகம்” என்பதன் பொருள் விளங்கிவிட்டது.

(அதாவது, நரகம் உண்டா எனத் தளபதி கேட்டதும், தளபதிக்கு நரகம்" என்பதன் பொருள் விளங்கவில்லை என ஹாக்குய்ன் அறிந்து கொண்டார். நரகத்தைப் பற்றி எப்படி வார்த்தைகளால் விளக்கினாலும் தளபதிக்குச் சந்தேகம் தீராது என்பதையும் ஹாக்குய்ன் அறிவார்.

"நரகம்” என்ன என்பதை விளக்கும் பொருட்டு, தளபதியை நரகத்தின் வாயிலுக்கே கொண்டு வந்து விட்டார் ஹாக்குய்ன். எப்படி இதைச் செய்தார்?

தளபதியை இகழ்ந்தார். தளபதி சினம் கொண்டார். சினம் அவரைக் கொடூரச் செயலைச் செய்யும் துன்மார்க்கனாக்கியது . அதனால் ஹாக்குய்னை வெட்டுவதற்கு வாளை ஓங்கினார்.

இத்தருணத்தில் இவர் தளபதி அல்ல. ஒரு கொடிய பாவச்செயலைச் செய்யப் போகும் கொடூரமானவன். கொடிய செயலைச் செய்யப் போகும் ஒரு பாவி. இவர் பாவச் செயலைச் செய்யப் போகும் அத்தருணத்தில்,

"இப்போது நரகத்தின் வாயில் திறக்கிறது” என ஹாக்குய்ன் அவரை எச்சரித்தார்.

ஹாக்குய்னின் எச்சரிக்கையைக் கேட்டதும் , அக்கணமே தளபதிக்கு "நரகம்” எ ன்பதன் பொருள் விளங்கிவிட்டது. தான் நரகத்தின் வாயிலுக்கே வந்துவிட்டதை உணர்ந்தார். "நான் " எனும் அகந்தையில் செய்யப்படும் பாவச் செயல் காரணமாகத்தான் நரகம் உள்ளது என நுண்ணறிவினால் அறிந்து கொண்டார்.)

இது விளங்கியதும், சினமும், பகையும் அவர் மனத்திலிருந்து விலகின.

நரகத்தின் வாயிலுக்கே சென்றுவிட்ட தன்னை , நரகத்தில் விழவிருந்த தன்னை, ஹாக்குய்ன் காப்பாற்றிவிட்டார் எனத் தளபதி புரிந்து கொண்டார்.

இது புரிந்ததும், தான் ஆத்திரத்தில் அறிவிழந்து செய்யவிருந்த பாவச் செயலுக்காக ஹாக்குய்ன் முன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டார் தளபதி, தன் முன் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கும் தளபதியிடம்,

## * கோபத்தை வெல்லும் வழி *

“இப்போது தெய்வலோக வாயில் திறக்கின்றது” என்று ஹாக்குப்பன் கூறினார்.

அக்கணமே தளபதிக்கு, “தெய்வலோகம்” என்பதன் பொருள் விளங்கிவிட்டது.

(அதாவது, தன்னை நரகத்தில் இருந்து மீட்டுவிட்டார் என அறிந்ததும், தளபதி தான் செய்யவிருந்த கொடிய செயலுக்காக ஹாக்குய்னிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கிறார்.

இப்போது தளபதியிடம் "நான்" எனும் அகந்தை இல்லை. மனத்தில் சினமும், பகையும், வெறுப்பும், இல்லை. தான் பாவம் செய்யவிருந்ததை உணர்ந்து உள்ளம் வருந்தி, மன்னிப்புக் கேட்கிறார். இத்தருணத்தில் ஹாக்குய்ன் அவரிடம்,

"இப்போது தெய்வலோக வாயில் திறக்கிறது " என்கிறார்.

இதைக் கேட்டதும் அக்கணமே தளபதிக்கு "தெய்வலோகம்" என்பதன் பொருள் விளங்கிவிட்டது. தான் தெய்வலோகத்தின் வாயிலுக்கே வந்துவிட்டதை உணர்ந்தார்.

"நான்" எனும் அகந்தையை அழித்து, பாவத்தைப் பாவம் எனக் கண்டு, பாவத்திற்கு அஞ்சுவதன் காரணமாகத்தான் தெய்வலோகம் உண்டு என நுண்ணறிவினால் அறிந்து கொண்டார்.)

அதன்பிறகு, "தெய்வலோகம் உண்டா?, " நரகம் உண்டா?" எனத் தளபதி குழப்பமடையவில்லை.

ஆகவே, தளபதி அறிந்து கொண்டது போல், நரகத்தின் வாயிலினுள் நுழைவதற்கான கட்டணம் "பாவம்" ஆகும். பாவ கருமங்களைச் செய்தோரை நரகம் தன் வாயிலைத் திறந்து ஏற்றுக் கொள்ளும். நான் எனும் அகந்தையில் பாவ கருமங்களைச் செய்யும் மடையனை, நரகம் தன் வாயிலைத் திறந்து, "வா" என அழைக்கும்.

வாயிலினுள் நுழைவதற்கான கட்டணம் பாவம் என்பதால், பாவ கருமங்களைச் செய்யாதோர் நரகத்திற்குள் நுழைய முடியாது. நரகத்தின் வாயில் இவர்களுக்குத் திறப்பதில்லை. ஆகவே பாவத்திற்கு அஞ்சி

வாழ்வோர், நரகத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை.

நான் எனும் அகந்தையைப் போக்கி, பாவத்திற்கு அஞ்சி வாழ்வோரை, தெய்லோகம் தன் வாயிலைத் திறந்து " வா" என அழைக்கும்.

ஆகவே, சினத்தினால் அறிவிழந்து, பிறருக்குத் தீங்கிழைப்போர் இதை மறத்தல் கூடாது.

ஒவ்வொரு முறையும் சினத்தினாலும், வெறுப்பினாலும் பிறருக்குத் தீங்கிழைக்கும் போதெல்லாம் "நரகத்தின் வாயில் திறந்து நம்மை வா என அழைக்கின்றது" என்று தம்மைத் தாமே எச்சரித்து, விழிப்புற்று, தாம் பாவம் செய்வதற்குக் காரணமாகிய சினத்தை விட்டுவிட வேண்டும்.

## 3.2 ராஜமாலாவின் கதை

பகவான் புத்தர் காலத்தில், இந்தியாவில் சவத்தி என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்திற்கு அருகில் காயா என்னும் கிராமம் இருந்தது. அக்கிராமத்தில் ஒரு பிராமணர் வீட்டில் ராஜமாலா என்பவள் வேலைக்காரியாகப் பணிபுரிந்து வந்தாள். ராஜமாலா ஓர் அடிமைப் பெண்.

பிராமணர் தம் மகனுக்கு ஒரு பிராமணப் பெண்ணைத் திருமணம் செய்து வீட்டிற்கு அழைத்து வந்தார். வீட்டுக்கு வந்த மருமகள், வந்த நாளிலிருந்தே ராஜமாலாவை வெறுத்து வந்தாள். தான் வீட்டிற்கு எஜமானி என்ற ஸ்தானத்தில், தன் அதிகாரங்களைப் பிரயோகித்து, ராஜமாலாவைக் கொடுமைப் படுத்தினாள்.

அற்ப விஷயங்களுக்கெல்லாம் எஜமானி சினங்கொள்வாள். சிடு சிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவாள். ஏதேனும் ஒரு குறையைத் தேடி, ராஜமாலாவின் மீது சினம் கொள்வாள். சினம் கொண்டு ராஜமாலாவை இகழ்வாள், திட்டுவாள், ஏசுவாள், முடியைப் பிடித்து இழுத்து அடித்துக் கொடுமைப் படுத்துவாள்.

"அற்ப விஷயங்களுக்கெல்லாம் எஜமானி சினம் கொள்கிறாளே!

*** கோபத்தை வெல்லும் வழி ***

வேண்டுமென்றே நம்மிடம் குறை தேடி, தன் அதிகாரத்தைப் பிரயோகித்து, திட்டி, ஏசி, முடியைப் பிடித்து அடிக்கிறாளே," என எண்ணிய ராஜமாலாவின் மனத்தில் சினம் எழுந்தது.

ஆரம்பத்தில் எஜமானியின் சினத்தைக் கண்டு அஞ்சினாள் ராஜமாலா, நாள்கள் செல்லச் செல்ல எஜமானி தன் அதிகாரத்தை உபயோகித்து, வேண்டுமென்றே தன்னைக் கொடுமைப் படுத்துகிறாள் என அறிந்த ராஜமாலா, சினங்கொண்டாள்.

எஜமானி ராஜமாலாவிடம் ஏதேனும் குறையைத் தேடி, திட்டி ஏசி, முடியைப் பிடித்து அடித்தாளென்றால், ராஜமாலாவின் மனத்தில் சினம் எழும். ஆரம்பத்தில் தன் சினத்தைக் காட்ட அஞ்சிய ராஜமாலா, நாளடைவில் எஜமானியிடம் சினத்தைக் காட்ட ஆரம்பித்தாள்.

முகத்தில் சினத்தைக் காட்டினாள்; நடையில் சினத்தைக் காட்டினாள்; வேலையில் சினத்தைக் காட்டினாள்; கடுகடுவென முகத்தை வைத்துக் கொண்டு மௌனம் சாதித்தாள்.

இவளுடைய எஜமானியோ பெருமைக்காரி; கர்வமும், அகந்தையும் கொண்டவள். ராஜமாலாவை வெறுப்பவள். ராஜமாலா சினம் கொள்வதைப் பார்த்து, அவளை மேலும் அதிகமாகக் கொடுமைப் படுத்தி மகிழ்ந்தாள்.

எளியோர் வலியோரிடம் தம் சினத்தைக் காட்டக்கூடாது. வலியோரிடம் பலமும், அதிகாரமும் உண்டென்பதால், அவர்கள் சினம் கொண்டால், எளியோருக்குப் பெரும் துன்பத்தைச் செய்வார்கள். இதை அறியாத ராஜமாலா, தன்னை வெறுக்கும் எஜமானியிடம் சினத்தைக் காட்டி, அதன் காரணமாக மேலும் அதிகத் துன்பத்திற்கு ஆளானாள்.

“நம் தலையில் முடி இருப்பதால் தானே, எஜமானி முடியைப் பிடித்து இழுக்கிறாள்" என எண்ணிய ராஜமாலா, சினங்கொண்டு தன் தலையை மொட்டையடித்துக் கொண்டாள்.

எஜமானி சினம் கொண்டு, "நீ தலையை மொட்டையடித்துக் கொண்டதால் என்னிடமிருந்து தப்ப முடியாது" என்று கூறி, ராஜமாலாவின் தலையில் ஒரு கயிற்றைக் கட்டி, அதை அவிழ்க்கக்கூடாது என்று ஆணையிட்டாள். அன்றிலிருந்து எஜமானி

ராஜமாலாவின் தலையில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்து இழுத்து, திட்டி, அடித்துக் கொடுமைப் படுத்தினாள்.

ராஜமாலாவின் மனத்தில், சினத்தோடு பகைமையும், வெறுப்பும் சேர்ந்து வருத்தியது. சினத்தில் அறிவிழந்த ராஜமாலா, தன் நிலையை எண்ணித் தன்னையே வெறுக்க ஆரம்பித்தாள்.

ஒருநாள் எப்போதும் போல, எஜமானி திட்டித் தலையில் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்து இழுத்து அடித்ததும், கடுஞ்சினம் கொண்ட ராஜமாலா, தற்கொலை செய்து கொண்டால் இந்த அவல நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என முடிவு செய்தாள்.

தண்ணீர் எடுக்கக் கேணிக்குச் செல்வதாகக் கூறி, குடத்தை எடுத்துக் கொண்டு வெளியேறியவள், சிறிது தூரம் சென்றதும், ஆத்திரத்தில் குடத்தை வீசியெறிந்துவிட்டு, அருகிலிருந்த காட்டிற்குத் தற்கொலை செய்து கொள்ளப் புறப்பட்டாள்.

அச்சமயம் சவத்திப் பட்டணத்தில் இருந்த பகவான் புத்தர், ராஜமாலாவின் அவல நிலையையும், அவள் தற்கொலை செய்யப் போவதையும் தன் ஞானத்தினால் அறிந்தார். அவள் மீது கருணை கொண்டு, அவளுடைய துன்பத்தைப் போக்கக் கருதி , சவத்திப் பட்டணத்திலிருந்து மறைந்து , காட்டில் தோன்றி, ஒரு மரத்தடியில் அமர்ந்தார்.

காட்டிற்குள் புகுந்த ராஜமாலா, கயிற்றில் சுருக்குப் போட்டு, மறு நுனியை ஒரு மரத்தில் கட்டினாள். சுருக்கைத் தன் கழுத்தில் மாட்டுவதற்கு முன், அருகில் யாரும் இருக்கிறார்களா என்று ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அருகிலிருந்த ஒரு மரத்தடியில், கருணையே வடிவமாக அமர்ந்திருந்த பகவான் புத்தரைப் பார்த்ததும், தன்னை வருத்திய ஏதோ ஒரு பெருந்துன்பம் தன்னை விட்டு விலகியது போல் உணர்ந்தாள். சினத்தினாலும், பகைமையினாலும் இருண்டிருந்த அவள் மனத்தில், திடீரென ஒளி தோன்றி அவ்விருளை விரட்டியது போல் உணர்ந்தாள்.

பகவான் புத்தர், “ராஜமாலா" என அன்புடன் அழைத்தார்.

பகவான் புத்தர் அவளை அன்புடன் அழைத்ததும், அவள் உள்ளத்தில் பேரின்ப மகிழ்ச்சி எழுந்தது. கயிற்றை வீசியெறிந்துவிட்டு, ஓடிச் சென்று பகவான் புத்தரை மண்டியிட்டு வணங்கினாள்.

பகவான் புத்தர் அவளை அன்புடன் நோக்கி, "ராஜமாலா! புத்தரிடம் சரணடைந்துவிடு. அவர் உனக்குச் சரணமும், தஞ்சமும், பாதுகாப்பும் அளிப்பார்" எனக்கூறினார்.

"சினத்தை மறந்துவிடு. சினத்தினால் உன்னையே மாய்த்துக் கொள்ளவிருந்தாய். உன்னையே அழிக்கவிருந்த சினத்தை அழித்துவிடு."

"கடுஞ்சினத்தால் தம்மையே மாய்த்துக் கொள்வோர், கடுஞ்சினம் காரணமாக, அடுத்த உலகில் துயரப் பிறப்பில் பிறந்து, துன்புறுவார்கள். இருளிலிருந்து இன்னும் கம்மிய இருளுக்குள் போவது போல், கடுஞ்சினத்தில் தம்மையே மாய்த்துக் கொள்வோர், ஒரு துன்பத்திலிருந்து மேலும் அதிகத் துன்பத்திற்குள் விழுவார்கள்."

உன் துன்பத்திற்கெல்லாம் காரணம், உன் மனத்திலுள்ள சினமும், பகைமையும், வெறுப்பும்தான். இவற்றை நீ அழிக்காதவரை, துன்பம் உன்னை விட்டு விலகாது. இதை அறியாத நீ, உன்னையே மாய்த்துக் கொள்ள இருந்தாய்.

"சினம் கொண்டு பிறருக்குத் தீங்கிழைப்போர், இங்கும் பிறரால் வெறுக்கப்பட்டு, உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் , பிறருக்குத் தீங்கிழைத்ததன் காரணமாக, நரகத்தில் பிறந்து துன்பப் படுவார்கள்."

"ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், சினம் கொள்வோர் மூன்று வகையில் பாவத்தைச் செய்வார்கள். மனத்தால் தீய எண்ணங்களை எண்ணுவார்கள்; நாவினால் தீய சொற்களைப் பேசுவார்கள்; உடலால் தீய செயல்களைச் செய்வார்கள்; பிறகு நரகத்தில் விழுந்து, செய்த பாவத்திற்காக வருந்துவார்கள்."

“சினத்தை மறப்பதால் , அதன் காரனமாகப் பின்னால் வருந்த நேராது. சினத்தை மறக்காவிட்டால், அந்தச் சினத்தினாலேயே துன்பங்கள் ஏற்படும். பின்னால் அதை நினைத்து மனம் வருந்த நேரிடும்." என உபதேசம் செய்தார்.

பின் அவளுக்கு அறத்தையும், தெய்வலோகம் செல்லும் வழியையும் உபதேசம் செய்தார்.

ராஜமாலாவின் உள்ளத்தில் பக்திக் கண் திறந்தது. “எஜமானி என்னைத் திட்டினாலும் , அடித்தாலும், இனி உள்ளத்தில் கோபத்திற்கும், பகைமைக்கும் இடம் கொடுக்க மாட்டேன்." என உறுதி பூண்டு, கிராமத்தை நோக்கி நடந்தாள். பகவான் புத்தரும் கிராமத்திற்குச் சென்று ஒரு மரத்தடியில் அமர்ந்தார்.

தான் ஆத்திரத்தில் வீசியெறிந்த குடத்தைத் தேடி எடுத்து அதில் தண்ணீர் எடுத்துக் கொண்டு, வீட்டை நோக்கி நடந்து வந்தாள் ராஜமாலா. வீட்டின் வாயிற்படியில் நின்றிருந்த பிராமணர், ராஜமாலாவைப் பார்த்து, “ஏன் இவ்வளவு நேரம். உன் முகத்தில் அமைதியும், நடையில் பணிவும் இருக்கின்றனவே! உன்னிடம் இதுவரை இல்லாத மாறுதல்கள் தென்படுகின்றனவே! என்ன காரணம்," என்று கேட்டார். ராஜமாலா நடந்தவற்றை விபரமாகக் கூறினாள்.

அதைக் கேட்ட பிராமணர் மிகவும் மகிழ்ந்து, மருமகளை அழைத்து, "ராஜமாலாவை ஒன்றும் செய்யாதே," எனக் கட்டளையிட்ட பின், விரைந்து சென்று பகவான் புத்தரை வணங்கி, அவரை வீட்டிற்கு உணவருந்த அழைத்தார். பகவான் புத்தர், அழைப்பை ஏற்று, பிராமணரின் வீட்டிற்குச் சென்றார்.

உணவருந்திய பின், பிராமணர் குடும்பத்தினருக்கும், மற்றும் அங்கு வந்திருந்த மற்றவர்களுக்கும், அறத்தையும், பாவமெது, புண்ணியமெது என்பதையும் விளக்கிக் கூறி, தேவலோகத்திற்குப் போகும் வழியைத் தெளிவுபடுத்தினார்.

பகவான் புத்தரின் உபதேசத்தைக் கேட்ட ராஜமாலாவின் எஜமானி, பெருமையினாலும், அகந்தையினாலும், கர்வத்தினாலும், சினத்தினாலும், வெறுப்பினாலும், தான் பாவம் செய்துள்ளதை உணர்ந்தாள். தான் சினம் கொண்டு ராஜமாலாவைக் கொடுமைப் படுத்தி, தனக்கே தீங்கிழைத்துக் கொண்டதை உணர்ந்தாள். பகவான் புத்தரின் முன் மண்டியிட்டு, மன்னிப்புக் கேட்டாள்.

பிராமணர் அங்குக் கூடி இருந்த அனைவரின் முன்னிலையில் ராஜமாலாவை அழைத்து, "இன்றிலிருந்து இவள் என் வளர்ப்பு மகள்"

எனக்கூறி, மருமகளிடம் இனிமேல் ராஜமாலாவைக் கொடுமைப் படுத்தக்கூடாது என்று ஆணையிட்டார். ராஜமாலா நீண்ட காலம் வாழ்ந்து, இறந்தபின் தெய்வ லோகத்தில் பிறந்தாள்.

---

# 4. பொறுமையும் பொறுத்தலும்

பொறுத்துக் கொள்வது என்பது, பிறர் குற்றம் செய்தபோது, கண்டிக்கக்கூடாது, எச்சரிக்கக் கூடாது அல்லது அறிவுரை கூறக் கூடாது என்றாகாது.

பொறுத்துக் கொள்வது என்பது, மற்றவர் குற்றம் செய்தபோது, சினம் கொண்டு நாமும் குற்றம் செய்யாமல் காத்துக் கொள்வதாகும். சினம் கொண்டோமென்றால், சினத்தினால் அறிவிழந்து, நாமும் குற்றம் செய்து, அதன் காரணமாகவே பின்னால் வருந்த நேரிடும்.

மற்றவர் குற்றம் செய்தபோது, நம் மனத்தில் சினம் எழுந்த போதிலும், அதை அடக்கிக் காத்தோமென்றால், நம்மிடம் நிதானமும், சிந்தனைத் தெளிவும், நன்மை – தீமை இவற்றை சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றலும் இருக்கும்.

இப்போது, நாம் உணர்ச்சிவசப் படாமல், மற்றவரிடம் அவர் குற்றத்தை விளக்கி, கண்டித்தோ, எச்சரித்தோ அல்லது அறிவுரையோ கூறினோமென்றால், மற்றவர் தன் குற்றத்தை உணர்வார். நம் பேச்சில் நியாயம் உண்டு என்பதால் மற்றவரும் அதை ஏற்பார்.

தன்னைவிட பதவியிலும், அதிகாரத்திலும், அந்தஸ்திலும் உயர்ந்தவரின் மரியாதையற்ற பேச்சை ஒருவேளை பொறுத்துக் கொள்ளலாம்; தனக்குச் சமமானவரின் மரியாதையற்ற பேச்சை ஒருவேளை பொறுத்துக் கொள்ளலாம்; ஆனால், தன்னிலும் பதவியிலும், அதிகாரத்திலும், அந்தஸ்திலும் குறைந்தவரின் பேச்சைப் பொறுத்துக் கொள்வது கடினம்.

தனக்கு ஏதேனும் துன்பம் செய்துவிடுவாரோ எனும் அச்சத்தில், தன்னிலும் உயர்ந்தோரின் மரியாதையற்ற பேச்சை ஒரு வேளை

பொறுத்துக் கொள்ளலாம்; தம் நட்பிற்கு ஏதேனும் தீங்கு ஏற்படுமோ எனும் அச்சத்தில், தனக்கு சமமானவரின் மரியாதையற்ற பேச்சை ஒருவேளை பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், தன்னிலும் பதவியிலும் அதிகாரத்திலும் அந்தஸ்திலும் குறைந்தவரின் மரியாதையற்ற பேச்சை பொறுத்துக் கொள்வதே உண்மையில் பொறுமையாகும்.

பகவான் புத்தர், "மிகப் பெரிய பலம்" எதுவென இப்படி விளக்கியுள்ளார்:

நிந்திப்போரை பதிலுக்கு நிந்திக்காமல், பழிப்போரைப் பதிலுக்குப் பழிக்காமல், திட்டுவோரைப் பதிலுக்குத் திட்டாமல், தனக்குத் தீங்கிழைப்போருக்குப் பதிலுக்குத் தீங்கிழைக்காமல், பொறுத்துக் கொள்வது மிகப் பெரிய பலமாகும்.

ஆகவே, எல்லா சூழ்நிலைகளிலும், சினம் தீயதே என அறிந்து, எவரிடத்தும் சினம் கொள்ளாமல், தன் மனத்தில் எழும் சினத்தைக் காத்துப் பொறுத்துக் கொள்பவரே பலசாலி, பொறுமைசாலி.

அக்கிரமக்காரனின் அடாத செயலைக் கண்டு, நாம் கோபம் கொள்வதில் நியாயம் உண்டு. அக்கிரமக்காரனின் அடாத செயலைக் கண்டித்து, நீதியை நிலை நாட்டுவதுதான் தர்மம். ஆனால், அக்கிரமக்காரனின் அடாத செயலைக் கண்டு நாம் சினம் கொண்டோமென்றால், சினத்தினால் அறிவிழந்து, நாமும் அடாத செயலைச் செய்து, அக்கிரமக்காரனாவோம். அதன் காரணமாகவே பின்னால் வருந்த நேரிடும்.

அக்கிரமக்காரனின் அடாத செயலைக் கண்டு நாம் கோபம் கொள்வதில் நியாயம் இருந்த போதிலும், கோபத்தை அடக்கி, நிதானத்தை இழக்காமல் நன்மை-தீமை இவற்றை எண்ணிப் பார்த்து, பொறுமை இழக்காமல், செயல்பட்டோமென்றால், அக்கிரமக்காரனை வென்று, நீதியையும், நியாயத்தையும் நிலை நாட்டலாம்.

# 5. மக்களில் இழிவானவர்கள்

சிலரிடம் அகந்தையும், கர்வமும், உள்ளத்தில் சினமும், வெறுப்பும், பகைமையும், வஞ்சகமும், இருக்கும். நன்மை தீமைகைளைச் சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை இருக்காது. பழிவாங்கும் குணம் மேலோங்கி நிற்கும். இத்தகையோர் பதவியும் அதிகாரமும் பெற்றால், தமக்குக் கீழுள்ளோரை வருத்தித் துன்புறுத்துவார்கள். உள்ளத்தில் பகைமை கொண்டு, வேண்டுமென்றே குறைகளைத் தேடி தீங்கிழைப்பார்கள். அற்ப விஷயங்களை எல்லாம் தவறாகக் கொண்டு தம் அதிகாரத்தைப் பிரயோகித்துப் பழி தீர்ப்பார்கள்.

தம்மிடம் பதவியும், அதிகாரமும் உண்டு என்ற மமதையில், அற்ப விஷயங்களுக்கெல்லாம் சினத்தைக் காட்டுவார்கள். சிடு சிடுவென வெறுப்பைக் காட்டுவார்கள். உள்ளத்தில் பகைமை கொண்டு, தம் அதிகாரத்தைப் பிரயோகித்துத் தீங்கிழைப்பார்கள்.

புரையோடிய ஒரு புண்ணில் சீழ் நிறைந்திருப்பதுபோல், இவர்கள் மனத்தில் சினமும், பகைமையும், வெறுப்பும், வஞ்சகமும் நிறைந்திருக்கும்; தம்மிடம் அதிகாரம் உண்டு என்ற செருக்கும் இருக்கும்.

புரையோடிய புண் எங்காவது இலேசாக மோதிவிட்டால் சீழை வெளியாக்கும். அதுபோல் அற்ப விஷயங்களையெல்லாம் இவர்கள் தவறாகக் கொண்டு சினத்தைக் காட்டுவார்கள்; வெறுப்பைக் காட்டுவார்கள்; அதிகாரத்தைப் பிரயோகித்துத் தீங்கிழைப்பார்கள்.

இவ்வகையான மக்களிடம் அறமும், நன்னெறி ஒழுக்கங்களும் இருக்காது. தீமையானவற்றைத் தீமை என்றும், நன்மையானவற்றை நல்லவை என்றும் அறியும் ஆற்றலும் இருக்காது.

அறமும், நன்னெறி ஒழுக்கங்களும் இல்லாத இவர்களிடம் அறத்தையும் நன்னெறி ஒழுக்கங்களையும் பேசினால் கோபமடைவார்கள்; சினங்கொள்வார்கள், பகைமை கொள்வார்கள்; சிடுசிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவார்கள்; உதாசீனப் படுத்துவார்கள். ஆகையால், இவர்களிடம் அறத்தையும் நன்னெறி ஒழுக்கங்களையும் பேசுவதில் பயனில்லை.

தீமையானவற்றைத் தீமை என்றும், நன்மையானவற்றை நல்லவை என்றும் அறியும் ஆற்றல் இல்லாத இவர்களுக்கு அறிவுரை கூறினால் கோபமடைவார்கள்; சினம் கொள்வார்கள், பகைமை கொள்வார்கள்; சிடுசிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவார்கள்; உதாசீனப்படுத்துவார்கள். ஆகவே, நன்மை எது, தீமை எது என விளக்கி இவர்களுக்கு அறிவுரை கூறுவதில் பலனில்லை.

அறிவில்லாத இவர்கள், தங்களைப் பெரிய அறிவாளிகள் என எண்ணிக்கொண்டு, நல்லோரையும், நல்லோர் கூறும் அறிவுரைகளையும் உதாசீனப்படுத்தி, பிறருக்குத் தீங்கிழைத்து, அதன் காரணமாகவே கெடுவார்கள்.

துர்நாற்றமடிக்கும் ஒரு சாக்கடையைப் போல், இவர்களின் எண்ணங்களும், பேச்சும், செயல்களும் விரும்பத் தகாததாகவும், வெறுக்கத் தக்கதாகவும், துன்பமும் வேதனையும் தருவதாகவும்தான் இருக்கும். இதன் காரணமாக நல்லோர் இவர்களை நாடுவதில்லை; இவர்களோடு உறவாடுவதில்லை.

இத்தகையோர் கணவனாக இருந்தால், அற்ப விஷயங்களை எல்லாம் தவறாகக் கொண்டு, சினம் கொண்டு, தம் அதிகாரத்தைப் பிரயோகித்து, மனைவி மக்களைக் கொடுமைப்படுத்துவார்கள்.

மனைவியாக இருந்தால், கணவனிடம் அற்ப விஷயங்களுக்கெல்லாம் சிடு சிடுவென்று கோபத்தைக் காட்டுவாள்; கணவனிடம் சிடுசிடுவென வெறுப்பைக் காட்டுவாள்; பிள்ளைகளிடம் சிடுசிடுவென வெறுப்பைக் காட்டுவாள். சண்டை சச்சரவு செய்து, தன் அதிகாரத்தைக் காட்டுவாள்.

அதிகாரியாக இருந்தால், அற்ப விஷயங்களுக்கெல்லாம் தமக்குக் கீழுள்ளவர்களிடம் சினத்தைக் காட்டுவார். உள்ளத்தில் வெறுப்பும், பகையும் கொண்டு, தம் அதிகாரத்தைப் பிரயோகித்துத் தீங்கிழைப்பார்.

எஜமானாக இருந்தால் , சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் சினம் கொண்டு, தம் அதிகாரத்தைப் பிரயோகித்துத் தம் பணியாட்களுக்குத் தீங்கிழைப்பார்கள்.

இழிவான மக்களிலேயே மிகவும் இழிவான மக்கள் இவர்களே! மனித குலத்திற்கே இவர்களால் அவமானம்தான்.

உள்ளத்தில், சினமும், பகையும், வெறுப்பும் கொண்டு, தம் அதிகாரத்தைப் பிரயோகித்துப் பிறருக்குத் தீங்கிழைக்கும் இவர்கள், அதன் காரணமாகப் பிறரால் வெறுக்கப்படுவார்கள்; பலரைப் பகைத்துக் கொள்வார்கள்; பகை பழி, பாவம், அச்சம் இவை யாவும் இவர்களை வருத்தித் துன்புறுத்தும். இவர்கள் வாழ்வில் சுகம் காண்பதில்லை.

இவர்கள் செய்த பாவம் பழுத்துத் தன் துன்பப் பலனைத் தரும்போது, அழுது, புலம்பி, வருந்தி வேதனையுறுவார்கள். உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும், பேயாகவோ, மிருகமாகவோ, நரகத்திலோ பிறந்து வேதனையுறுவார்கள்.

இத்தகைய மனிதர்களைப் பகவான் புத்ததர் இவ்வாறு எச்சரிக்கிறார்:

***எவனொருவன் சினம் கொண்டு பகைமை பாராட்டுகிறானோ, எவனொரிவனிடம் பாவமும் கபடமும் உண்டோ, எவனொருவனிடம் தவறான கருத்துகளும், உள்ளத்தில் வஞ்சனையும் உள்ளனவோ, அவனே மனிதர்களிடையே தாழ்த்தப் பட்டவன்.***

***ஏ மானிடனே! தீமையில் மகிழும் நீ, இதை அறிந்து கொள். உன் செயலுக்கு நீயே வாரிசு. உன் பாவங்கள் உன்னிடமே திரும்பி வரும்.***

## 5.1 சினத்தால் அழிந்த எஜமானி

முன்னொரு காலத்தில் பெனாரஸ் பட்டணத்தில் ஒரு செல்வந்தர் வாழ்ந்து வந்தார். செல்வம் மிகுந்த இவர், மாளிகை போன்ற வீட்டில் வாழ்ந்து வந்தார். வீட்டில் பல அடிமைகளும் , வேலையாட்களும் பணிபுரிந்து வந்தனர்.

இவருக்கு ஒரு மகள் இருந்தாள். மிகவும் அழகுடையவள். ஆனால் கொடிய சுபாவம் படைத்தவள். புறத்தே அழகியாகத் தோற்றமளித்த போதிலும், அகத்தே இவள் உள்ளம் இருண்டிருந்தது. கர்வமும், பெருமையும், சினமும், வெறுப்பும், பகைமையும் இவள்

உள்ளத்தை ஆண்டன.

செல்வமும், அதிகாரமும், தான் அழகி என்ற செருக்கும், சினமும், இரக்கமில்லா உள்ளமும் இவளை இழியவளாக்கியது. அற்ப விஷயங்களுக்கெல்லாம் வேலைக்காரர்களிடம் சினத்தைக் காட்டுவாள்; வெறுப்பைக் காட்டுவாள்; சீறித் தீண்டும் நாகத்தைப் போல், வேலையாட்களைத் தண்டிப்பாள். வேலைக்காரர்களிடம் இவள் இரக்கமோ, அனுதாபமோ காட்டுவதேயில்லை.

காரணமில்லாமலே இவள் சினம் கொள்வாள். குற்றமில்லாத இடத்தில் குற்றத்தைக் காண்பாள்; தவறு இல்லாத இடத்தில் தவற்றைக் காண்பாள்; சிறிதும் அனுதாபமின்றி வேலையாட்களைத் தண்டிப்பாள்.

உணவருந்தும்போது ஏதேனும் ஒரு குறையைத் தேடி, தன் அதிருப்தியைக் காட்டுவாள். சினம் கொண்டு கூச்சலிடுவாள். சில சமயங்களில் பாத்திரங்ளை வேலையாட்களின் மேல் எறிவாள்.

எப்படித்தான் வேலையாட்கள் இவளுக்குப் பணிவிடை செய்தாலும், இவள் திருப்தி அடைவதில்லை. எல்லாரும் இவளைக் கண்டு அஞ்சினார்கள். இவள் முன் வருவதற்கே அஞ்சினார்கள். வீட்டில் பணிபுரிந்த வேலையாட்கள் எல்லாருமே, ஒரு மனதாக இவளை வெறுத்தார்கள்.

இவளுடைய அதிகாரத்தையும், கொடுமைகளையும் தாங்க முடியாத வேலையாட்கள், "இவளுக்கு ஏதேனும் துன்பம் வரவேண்டும்" என இறைவனை வேண்டிக் கொண்டார்கள்.

ஒருநாள் மாலையில் தனக்குப் பணிவிடை செய்யும் பெண்களுடன், கங்கைக்குக் குளிக்கச் சென்றாள். இவள் கங்கையில் குளித்துக் கொண்டிருக்கையில், கருமேகங்கள் சூழ்ந்து பலத்த மழை பெய்யத் தொடங்கியது. நதியில் குளித்துக் கொண்டிருந்த மற்றவர் யாவரும் விரைந்து கரையேறி வீட்டுக்குச் சென்றுவிட்டனர்.

ஆனால், இவளோ கரையில் நின்று கொண்டிருந்த பணிப் பெண்களிடம், “வந்து என்னைத் தேய்த்துக் குளிப்பாட்டுங்கள்” என ஆணையிட்டாள். இதைக் கேட்ட பணிப் பெண்கள், “ இந்தச் சனியனை

ஒழிப்பதற்கு இதுவே தக்க தருணம்" எனத் தங்களுக்குள் பேசி அனைவரும் ஏற்றுக் கொண்ட பின், நதிக்குள் இறங்கினார்கள்.

நதிக்குள் இறங்கியவர்கள், இவளைத் தேய்த்துக் குளிப்பாட்டுவது போல் பாவனை செய்து, " ஒழிந்து போ" எனக் கூறி, ஒருமிக்க இவளை ஆழமான நீரோட்டத்தில் தள்ளிவிட்டார்கள்.

பெரும் ஓசையுடன் பலத்த மழை பெய்ததால், இவள் எழுப்பிய கூக்குரல் எவருக்கும் கேட்கவில்லை. வேகமாக ஓடிய ஆற்று நீர், இவளை அடித்துச் சென்றது. இதற்குள் இருட்டிவிட்டது.

வீடு திரும்பிய பணியாட்களிடம் எஜமானி எங்கே என்று கேட்ட போது, எஜமானி நதியில் குளித்துக் கொண்டிருந்த போது, திடீரெனப் பலத்த மழை பெய்ய ஆரம்பித்தது. மழை பெய்த காரணத்தினால், எஜமானி கரை ஏறிவிட்டாள். இதற்குள் இருட்டிவிட்டது."

"இருட்டில் மழையில் நனைந்து கொண்டே, நாங்கள் திரும்பி வரும்போது, எஜமானி எங்களிடமிருந்து பிரிந்து விட்டாள். ஒருவேளை எஜமானி எங்களுக்கு முன் வீட்டிற்கு வந்திருக்கலாம் என எண்ணி, நாங்கள் வந்துவிட்டோம். அவள் எங்கு சென்றாள் என்பது எங்களுக்குத் தெரியாது," என்று பணியாட்கள் கூறிவிட்டார்கள்.

செல்வந்தர் உடனே வேலையாட்களை அனுப்பி, மகளைத் தேடச் சொன்னார். பட்டணம் முழுதும் தேடிய போதிலும் அவளைக் காணவில்லை.

ஆகவே, தன்னிடம் பதவியும், அதிகாரமும் உண்டு என்ற மமதையில், உள்ளத்தில் சினமும், வெறுப்பும், பகைமையும் கொண்டு, கொஞ்சமும் அனுதாபமில்லாமல், தனக்குக் கீழுள்ளோரை, தண்டித்துத் துன்புறுத்துவோர், இந்தக் கதையை ஓர் எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும்.

பாவத்திடமிருந்து எவரும் தப்ப முடியாதென்பதால், இவர்கள் செய்த பாவம் இவர்களிடமே திரும்ப வரும்போது, துன்பம் இவர்களைச் சூழ்ந்து கொள்ளும். துன்பம் சூழ்ந்து கொண்டபோது, இவர்களின் துயரத்தைக் கண்டு எவரும் பரிதாப்பபட மாட்டார்கள். மாறாக இத்தகையோரின்

துன்பத்தைக் கண்டு மற்றவர்கள் மகிழ்வார்கள்.

இத்தகையோர் உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், தலைகீழாக நரகத்திற்குள் விழுவார்கள் என்று பகவான் புத்தர் எச்சரித்துள்ளார்.

## 5.2 சினத்தினால் மருமகளைக் கொன்ற மாமியார்

பகவான் புத்தர் காலத்தில் இந்தியாவில் இராஜ கிரகம் என்றொரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்தில், அறநெறியறிந்து, பயபக்தியுடன் வாழும் ஒரு குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். கணவன் மனைவி இருவருமே பகவான் புத்தரிடம் மிகவும் பக்தி கொண்டவர்கள்; பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசங்களை, நம்பும் மனத்துடன் கேட்டு, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, நன்னெறிகளில் ஒழுகி, தான தருமங்கள் செய்து வாழ்ந்து வந்தார்கள்.

இவர்களுக்கு ஒரு மகள் இருந்தாள். தன் பெற்றோர்களைப் போலவே இவளும் பகவான் புத்தரிடம் பக்தி கொண்டு நல்வழியில் நடந்து வந்தாள். இளம் வயதிலிருந்தே இவள் மிகவும் தயாள குணம் உடையவளாய் இருந்து வந்தாள். பிறருக்குக் கொடுப்பதில் மகிழ்ந்தாள்.

தாயார் தனக்குக் கொடுக்கும் உணவில் ஒரு பகுதியை, பிச்சைக்காரர்களுக்கோ, அல்லது புத்தரின் சிஷ்யர்களுக்கோ கொடுத்து அதில் மகிழ்ந்தாள். தான் உணவருந்தும்போது எவரும் பிச்சைக் கேட்டு வீட்டிற்கு வரவில்லையென்றால், உணவின் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துவிட்டு உண்பாள். பிறகு, ஒதுக்கி வைத்த உணவை, பகவான் புத்தரின் சிஷ்யர்களுக்கோ, அல்லது பிச்சைக்காரர்களுக்கோ கொடுத்து மகிழ்வாள்.

இவளுடைய தயாள குணத்தைக் கண்ட பெற்றோர், உள்ளம் மகிழ்ந்தார்கள். "நம் மகள் கொடுப்பதில் மகிழ்கிறாள்" என எண்ணி, மகிழ்ச்சியுற்றனர்.

இவள் வயதிற்கு வந்ததும், அந்தப் பட்டணத்திலேயே வாழ்ந்த மற்றோர் குடும்பத்தின் மகனுக்கு, இவள் பெற்றோர் இவளைத் திருமணம் செய்து வைத்தனர்.

ஆனால், இவள் புகுந்த குடும்பத்தினரோ முறையான பக்தி இல்லாதவர்கள்; தவறான கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள், அறத்திலும், நன்னெறிகளிலும் நாட்டமில்லாதவர்கள்; கொடுப்பதில் நாட்டமில்லாதவர்கள் ; தான தர்மங்களில் நம்பிக்கை இல்லாதவர்கள்.

மருமகள் வீட்டிற்கு வந்த முதல் நாளிலிருந்தே, மாமியார் தன் அதிகாரத்தைப் பிரயோகித்தாள் . மாமியார் ஒரு கோபக்காரி. உள்ளத்தில் வெறுப்பும், பகைமையும் கொண்டவள். இரக்கமில்லாதவள்; கருமித் தனம் படைத்தவள். பக்தியிலும், நல்லொழுக்க நெறிகளிலும் நாட்டமில்லாதவள்; கொடுப்பதற்கு மனமில்லாதவள்.

பக்தியிலும், நன்னெறிகளிலும், கொடுப்பதிலும் நாட்டமுள்ள மருமகளுக்குப் புகுந்த குடும்பத்தில், வாழ்க்கை சிரமமாகவே இருந்தது. மருமகளின் தயாள குணத்தை மாமியார் வரவேற்கவில்லை.

மாறாக, மருமகள் குடும்பச் சொத்தை அழிக்க வந்தவள் என்றும்; கொடுப்பதால் குடும்பச் சொத்து சிறுகச் சிறுகக் கரைந்துவிடும் என்றும், கொடுப்பதில் பலனில்லை என்றும் தான தருமங்களைச் செய்யக்கூடாதென்றும் மாமியார் ஆணையிட்டார்.

மாமியாரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு , மருமகள் கொடுப்பதை நிறுத்திவிட்டாள். ஆனால் பக்தியிலும், நன்னெறி ஒழுக்க நெறிகளிலும் உறுதியாக நின்றாள்.

ஒரு நாள் பகவான் புத்தரின் சிஷ்யர் ஒருவர், வீடு வீடாக யாசித்துக் கொண்டு வந்தவர், இவள் குடி புகுந்த வீட்டின் வாயிலில் வந்து நின்றார். கொடுத்துப் பழகிய இவள், வீட்டின் வாயிலில் பிச்சைத் தட்டுடன் நின்ற காவியுடை தரித்த துறவியைக் கண்டதும், அவருக்கு ஏதேனும் கொடுக்க வேண்டும் என்ற அவா இவள் உள்ளத்தில் எழுந்தது.

மாமியார் அப்போது வீட்டில் இல்லை. மாமியார் தனக்காக ஓர் அப்பம் எடுத்து வைத்திருந்தாள். "பிறகு மாமியாரிடம் சொல்லிக் கொள்ளலாம். நான் செய்யும் இந்த நற்செயலைக் கேட்டாள் மாமியார் மகிழ்வாள்” என

எண்ணிக் கொண்டு, மாமியார் தனக்காக எடுத்து வைத்திருந்த அப்பத்தை எடுத்து வந்து துறவிக்கு வழங்கினாள். துறவியும் அதை ஏற்று, நன்றி தெரிவித்த மின், அடுத்த வீட்டிற்குச் சென்றார்.

மாமியார் வந்ததும், "தாங்கள் எடுத்து வைத்திருந்த அப்பத்தை, யாசித்து வந்த பகவான் புத்தரின் சிஷ்யர் ஒருவருக்கு வழங்கி விட்டேன்" என்று கூறினாள்.

இதைக் கேட்ட மாமியார், "என் பொருளை என்னைக் கேளாமலே ஒரு சந்நியாசிக்குக் கொடுத்தாயா! உனக்கு எவ்வளவு திமிர் இருந்தால் இந்தக் காரியத்தை நீ செய்திருப்பாய். இந்த வீட்டின் சொத்தை அழிக்கவா வந்தாய். உன்னை வளர்த் த முறை சரியில்லை," எனச் சினம் கொண்டு மருமகளை ஆத்திரமடைந்து திட்டிக் கடிந்துரைத்தாள். ஆத்திரத்தில் நன்மை, தீமை இவற்றை எண்ணிப்பாராமல், அருகிலிருந்த உடைந்த உலக்கையை எடுத்து மருமகளின் தோளில் அடித்தாள்.

இந்தப் பெண்ணோ மிகவும் மென்மையாகவும், உயர்ந்த பண்புகளுடனும் வளர்க்கப்பட்டவள். உடைந்த உலக்கையால் அடிக்கப்பட்ட இவள் சில நாள்கள் கடும் வலியால் வேதனைப்பட்டு, இறந்துவிட்டாள். தெய்வலோகத்தில் மீண்டும் பிறந்தாள்.

சில காலம் கழித்து, மாமியாரின் இவ்வுலக வாழ்வை மரணம் துண்டித்தது. இவள் செய்த பாவ பருமங்களின் பலனாக நரகத்தில் பிறந்தாள்.

மருமகள் செய்தது ஒரு நற்செயலே. மனிதாபிமானமுள்ள எவரும் மருமகளின் செயலை ஆமோதிப்பர், வரவேற்பர்.

அப்படியே மருமகளின் செயலைக் குற்றமெனக் கொண்டாலும், ஓர் அப்பத்தைத் தவ வாழ்வு வாழும் ஒரு துறவிக்குப் பிச்சை கொடுத்தது பெரும் குற்றம் எனக் கொள்ள முடியாது.

ஆனால் மாமியாரிடம் நல்ல பண்புகள் இல்லையாதலால், இந்த நற்செயலைத் தவறாகக் கொண்டாள். தவறாகக் கொண்டதன் காரணமாகச் சினம் கொண்டாள். சினத்தின் காரணமாக வெறுப்பும், பகைமையும் பாராட்டி மருமகளை உலக்கையால் அடித்தாள். மருமகளுக்குப் பெருந் தீங்கிழைத்தாள். அதன் காரணமாக அடுத்த பிறவியில் நரகத்தில் விழுந்தாள்.

அற்ப விஷயங்களை எல்லாம் தவறாகக் கொண்டு, சினம் கொண்டு, தீங்கிழைப்போர், இந்த மாமியார் போல்தான். இத்தகையோர் தமக்கு அடுத்த உலகில் நரகத் தண்டனை காத்திருக்கிறது என்பதை மறக்கக் கூடாது.

# 6. சினம் கொள்ளாமை

தோதையா என்பவர், மன்னர் பசநாடியின் பிராமணப் புரோகிதர். இவர் ஒரு செல்வந்தர். ஆனால் மிகவும் இழிவானவர். ஆணவக்காரர்; கர்வம் நிறைந்தவர்; கோபக்காரர்; உள்ளத்தில் பகை கொண்டு துவேஷம் பாராட்டுபவர். குரோதம் நிறைந்தவர். செல்வச் செருக்கில் பிறரை அலட்சியப்படுத்துபவர். சினம் கொண்டு, பகை பாராட்டி, பிறரை இகழ்ந்து நிந்தனை செய்பவர்.

இவர் புரோகிதரான போதிலும், கர்வமும், ஆணவமும், சினமும், துவேஷமும், இவரை இழிவானவராக்கியது. இவர் இறந்து, மறு பிறப்பில் தன் வீட்டிலேயே நாயாகப் பிறந்தார். அப்போது அந்த வீட்டில், அவருடைய மகன் சுபா, பொறுப்பேற்று குடும்பத்தைப் பராமரித்து வந்தார்.

ஒரு முறை பகவான் புத்தர் அந்த வீட்டிற்குச் சென்றார். பிராமனருடைய மகன், பகவான் புத்தரை வணங்கி, அன்புடன் வரவேற்றார். ஆனால், வீட்டிலிருந்த நாய், பகவான் புத்தரைக் கண்டதும், சினம் கொண்டு குரோதத்துடன் பலமாகக் குரைத்தது.

சினம் கொண்டு குரோதத்துடன் குரைக்கும் நாயின் முன்னால் பிறப்பை அறிந்த பகவான் புத்தர், இலேசாகப் புன்னகை செய்தார். பிறகு சுபாவிடம், அந்த நாய் முற்பிறப்பில் அந்த வீட்டின் சொந்தக்காரர் என்றும், சுபாவின் தந்தை பிராமணர் கோதையா என்றும் விளக்கினார். மனிதர்கள் தம் செயல்களுக்கு தாமே வாரிசு என்றும், ஒரு மனிதனின் அடுத்த உலகக் கதியை அவனுடைய செயல்களே நிர்ணயிக்கும் என்றும் சுபாவிற்கு உபதேசம் செய்து சென்றார்.

எவரொருவருடைய செயலும் முழுமையாக மறைவதில்லை.

செயல்களுக்குப் பிற்பயன் உண்டு. மனத்தில் தோன்றும் சினம், சற்று நேரத்தில் மறைந்துவிடும். ஆனால், சினம் கொண்டு செய்த பாவம் மறைவதில்லை. பாவம் தன் துன்பப் பலனைக் கொடுக்காமல் மறைவதில்லை.

சினத்தினால் அறிவிழந்து தீமை செய்பவன், தீமை செய்ததன் காரணமாக, இங்கும் வருந்துகிறான், அடுத்த உலகிலும் வருந்துகிறான்; இங்கும் பிறரால் வெறுக்கப்படுகிறான்; அடுத்த உலகிலும் வேதனைப்படுகிறான்.

சினம் கொண்டு தீமை செய்வோர், "எனக்கும் இங்கே முடிவுண்டு, சினம் கொண்டு நான் செய்யும் பாவங்களே, அடுத்த உலகிற்கு நான் தேடும் சொத்து," எனத் தம்மைத் தாமே எச்சரித்து, சினத்தை அடக்கி ஆண்டு வெல்ல வேண்டும். சினம் தீமை செய்வதற்குக் காரணமாகையால், தம்மைத் துன்பத்தினின்றும் காத்துக் கொள்ள விரும்புவோர், தம் மனத்தில் சினம் எழாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

சினம் கொள்வது குற்றம் என அறிந்தும், சினத்தை வெல்ல முயற்சி ஏதும் செய்யாமல், மீண்டும் மீண்டும் சினம் கொண்டு தீமை செய்வோரும்; சினத்தை மறப்பதற்குப் பதில், சினம் நியாயமானதே எனக் காரணங்கள் பல கூறி, பிறர் மீது பழி சுமத்துவோரும்; சினத்தை வல்லமை எனக் கருதி, அதில் பெருமை கொண்டு தீமை செய்வோரும் பகவான் புத்தரின் எச்சரிக்கையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

*தீய வினையைச் செய்யாது விடுதலே நலம் ஏனென்றால் தீவினை பின்னால் துன்பத்தை அளிக்கின்றது. நல்வினை புரிவதே நலமாகும்; அதனால் பின்னால் வருந்த நேராது.*

*தீய கருமத்தைச் செய்தவன் உலக வாழ்வில் வருந்துகிறான்; அடுத்த உலகிலும் வருந்துகிறான்; ஈருலகிலும் அவனுக்குத் துயரமே. "நான் செய்த பாவம்!" என்று வருந்துகிறான். நரகத்திலும் அவன் அதிகமாய் வேதனைப் படுகிறான்.*

*பாவம் பழுத்துப் பலனளிக்காதவரையில் மூடன் அதைத் தேன் என்று விரும்புகிறான்; ஆனால், அது பழுத்துப் பலனளிக்கையில் அவன் ஆறாத் துயரை அடைகிறான்.*

*மூடனுடைய பாவம் அவனிடமே பிறந்தது, அவனே படைத்தது. வைரம் மற்ற மணிகளை அறுப்பது போல், அவன் செய்த பாவமே அவனை அழித்துவிடும்.*

*மனிதன் தன் பாவகருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை.*

*மனிதன் மரணத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை.*

*பகவான் புத்தர் இப்படியும் கூறியுள்ளார்:*

*இங்கு ஒரு பெண்ணோ அல்லது ஆணோ; அவர் கோபக்காரர், சிடுசிடுப்புக்காரர், எப்போதும் கோபக் குறியுடன் இருப்பார். அற்ப விஷயங்களுக்கெல்லாம் கோபித்துக் கொள்வார். வெறுப்பைக் காட்டுவார். விரோதமும், பகைமையும் கொள்வார்; நிதானம் அற்றவர், பொறுமை இல்லாதவர். இதன் காரணமாக உடலை விட்டு உயிர் பிரிந்தபின், நரகத்திலோ அல்லது மற்றத் துயரப் பிறவிகளிலோ மீண்டும் பிறப்பார்.*

*சான்றோர் அருளிய நன்னெறி உபதேசங்களை நிந்திப்போர், அதன் காரணமாகத் தவறான கொள்கைகளைப் பின்பற்றி, எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் தீமை செய்வதை இங்கு காண்கிறேன். இவர்கள் பாவங்களைக் குவிப்பதை இங்கு காண்கிறேன். இத்தகையோர் உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், துயரப் பிறப்புகளில் (நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ) பிறந்து வேதனைப்படுவதைக் காண்கிறேன்.*

*இதனைப் பிறர் சொல்லக் கேட்டு நான் கூறவில்லை. நானே பார்த்து, நானே அறிந்து, உங்களுக்கு அறிவிக்கின்றேன்.*

*சினங்கொண்டு தீங்கிழைப்போர், பகவான் புத்தரின் எச்சரிக்கையை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.*

சினம் கொள்பவன் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்க எண்ணி, தனக்கே தீங்கிழைத்துக் கொள்வான். ஆகவே, அறிவுடையோர் சினத்தை மறக்க வேண்டும்.

சினத்தை அணைத்துக் கொள்பவன், அறிவிழந்து தீமை செய்கிறான். இவன் செய்த பாவம் இவனிடமே திரும்பி வரும்போது, இங்கும் வருந்துகிறான், அடுத்த உலகிலும் வருந்துகிறான். ஆகவே, அறிவுடையோர் சினத்தை மறக்க வேண்டும்.

சினத்தை மறப்பதால், அதன் காரணமாகப் பின்னால் வருந்த நேராது. சினம் கொண்டால், அதன் காரணமாகவே பின்னால் வருந்த நேரிடும். ஆகவே அறிவுடையோர் சினத்தை மறக்க வேண்டும்.

சினம் தீமை செய்வதற்குக் காரணமாகையால், தன்னைத் துன்பத்தினின்றும் காத்துக்கொள்ள விரும்புவோர், சினத்தை மறக்க வேண்டும்.

இதை அறிந்தோர் சினம் கொள்வதில்லை. சினத்தைத் தம் மனத்திலிருந்து வேரறுத்து விடுவார்கள்; சினத்தை அழித்து விடுவார்கள்; சினத்தை மறந்து விடுவார்கள்.

நம் மனத்தில் கோபம் எனும் மாசு இருந்தால், நம் எண்ணங்களிலும் கோபம் இருக்கும்; நம் சொற்களிலும் கோபம் இருக்கும்; நம் செயல்களிலும் கோபம் இருக்கும். ஏன்? நம் மனத்தில் கோபம் எனும் மாசு இருக்கிறது.

கோபத்தை மனமாசு என அறிந்து, அதை மனத்திலிருந்து விலக்கி விட்டோமென்றால், நம் எண்ணங்களிலும், சொற்களிலும், செயல்களிலும் கோபம் இருக்காது. இதுவே சினத்தை மனத்திலிருந்து வேரறுப்பது; சினத்தை மறப்பது, சினமின்மை, சினம் கொள்ளாமை எனப்படும்.

வேர் இறந்து, பட்டுப்போன மரம் இனி மேலும் தளிராததுபோல், சினத்தை மறந்தோர் மனத்தில் இனிமேலும் சினம் எழுவதில்லை. அறிவிலார் சினம் கொண்டு தீயினால் எரிப்பது போன்ற துன்பத்தைக் கொடுத்தாலும், இவர்கள் சினம் கொள்வதில்லை. இவர்கள் மனத்தில் கோபம் எழுவதில்லை.

சினத்தை மறப்பதனால் நன்மையே வரும், தீமை ஏதுமில்லை. சினத்தை அணைப்பதால் துன்பமே வரும், நன்மை ஏதும் இல்லை. ஆகவே, சினத்தை மறந்தோருக்கு, சினத்தினால் இனி துன்பமே இல்லை.

நினைத்த மாத்திரத்தில் சினத்தை மறக்க முடியாது. வழக்கமாகவே சினங்கொள்ளும் ஒருவர், நினைத்தவுடன் சினத்தை மறப்பதென்பது இயலாத செயலாகும். சினத்தை மறக்க விரும்புவோர், சினத்தை அடக்கிப் பழக வேண்டும்.

சினத்தைத் தீயவை என அறிந்து, அதன் மேல் வெறுப்படைந்து, எப்போதெல்லாம் மனத்தில் சினம் எழுகின்றதோ, அப்போதெல்லாம் அதை அடக்கிக் காக்க வேண்டும். சினத்தை எதிர்த்துப் போராடினோமென்றால், படிப்படியாக, மனத்தில் எழும் சினத்தின் வேகம் தணிந்து, நாளடைவில் மனத்திலிருந்து முழுமையாக மறைந்துவிடும்.

## 7. சினத்தை வெல்லும் வழி

சினம் கொண்டு பிறருக்குத் தீங்கிழைப்போர், இவ்வாறு சிந்திக்க வேண்டும்:

பிறர் தம் மனத்தில் சினம் கொண்டு எனக்குத் தீங்கிழைத்தால், அது எனக்கு வேதனையும், துன்பமும் தருமே! அது எனக்கு மகிழ்ச்சி தருவதில்லையே! அதுபோல், நான் சினம் கொண்டு பிறருக்குத் தீங்கிழைத்தால், அது அவருக்கும் வேதனையும், துன்பமும் தருமே! அது அவருக்கு மகிழ்ச்சி தராதே!

பிறர் சினம் கொண்டு எனக்குத் தீங்கிழைப்பதை விரும்பாத நான், எப்படிச் சினம் கொண்டு பிறருக்குத் தீங்கிழைப்பது? எது எனக்கு வேதனையும், துயரமும் தருமோ, அது பிறருக்கும் வேதனையும் துயரமும் தருமே! அது அவருக்கு மகிழ்ச்சி தராதே!

சினம் கொண்டு தீங்கிழைப்போர், அதன் காரணமாகவே தம் பெருமையை இழப்பார்களே! பிறரால் வெறுக்கப்படுவார்களே!

சினம் கொண்டு தீங்கிழைப்போர், தீங்கிழைத்ததன் காரணமாக இங்கும் தண்டிக்கப்பட்டு, உடலைவிட்டு உயிர் பிரிந்தபின், அடுத்த உலகிலும் தண்டிக்கப் படுவார்களே!

இவ்வாறு சிந்தித்து, சினத்தைத் தீமை என அறிந்து, அதன் மேல் வெறுப்படைந்து, அதை விட்டுவிட வேண்டும். அதை மறந்துவிட வேண்டும்.

வாழ்வில் சுகத்தையும், அமைதியையும், நிம்மதியையும், சாந்தியையும், கெடுக்கும் சினத்தை மறப்பதால் நன்மையே வரும், தீமை ஏதுமில்லை. சினத்தை அணைத்துக் கொள்வதால் துன்பமே வரும், நன்மை ஏதுமில்லை. ஆகவே, சினத்தை மறந்தோருக்கு சினத்தினால் இனி துன்பமே இல்லை.

எவரொருவருடைய குற்றங்குறைகளும், தாமாகவே விலகுவதில்லை. சினமும் அதுபோல்தான். உடலுக்கு நோய் வந்தால், தக்க மருந்து கொடுத்து குணப்படுத்த வேண்டும். அதுபோல், தம்முள்ளிருந்தே தம்மைக் கொள்ளும் சினத்தையும் தக்க முறைகளால்தான் வெல்ல வேண்டும்.

ஒருவருடைய தலையில் அழுக்கு இருந்தால், சரியான முறைகளால் தலையைச் சுத்தப்படுத்தலாம். எந்தச் சரியான முறைகள்? தலையைச் சுத்தப்படுத்தும் பொருள்களாலும், (சாம்பு) நீராலும் சுத்தப்படுத்துவோரின் முயற்சியாலும் தலையைச் சுத்தப்படுத்தலாம். இதுதான் தலையைச் சுத்தப்படுத்துவதற்குச் சரியான முறை.

அது போல, கோபத்தினால் மாசுபட்டுள்ள மனத்தையும் சரியான முறைகளால் தான் சுத்தப்படுத்த முடியும்.

அதாவது, சரியான பயிற்சிகளால்தான் சினத்தை வெல்ல முடியும். சினத்தின் பிடியிலிருந்து மீள விரும்புவோர், சினத்தை வெல்ல விரும்புவோர், சினத்தை அழிக்க விரும்புவோர் கீழ்க்காணும் பயிற்சிகளை மேற்கொள்ளலாம்.

## i) ஆய்வும் நுண்ணறிவும்

சினத்தை வெல்ல விரும்புபவர், சினத்தினால் ஏற்படும் துன்பங்களை ஆராய்ந்து அறிய வேண்டும். அதை மறப்பதால் ஏற்படும் நன்மைகளை ஆராய்ந்து அறிய வேண்டும். இந்த அறிவைப் பெறுவது எப்படி? 'சான்றோர் அருளிய நன்னெறி உபதேசங்களைக் கல்வி கேள்வியால்

கற்பதனாலும், பெரியோர் சொல்லும் தர்ம உபதேசங்களை கருத்துடன் கேட்பதனாலும் இவ்வறிவைப் பெறலாம்.

இவ்வாறு ஆராய்ந்து பார்ப்பவர், எல்லா சூழ்நிலைகளிலும் சினம் கொடியதே என்பதை அறிவார். எல்லா சூழ்நிலைகளிலும் சினத்தை மறப்பதே சிறப்பு என்பதையும் அறிவார்.

இந்நுண்ணறிவினால், சினம் தன்னையே அழிக்கும் பகைவன் என்றும் அறிந்து கொள்வார். சினத்தை அடக்கும் குணமே சிறந்த குணமென்று இப்போது இவருக்குத் தெளிவாக விளங்கும்.

எப்போது ஒருவர் இந்நுண்ணறிவைப் பெறுகின்றாரோ, அப்போதுதான் சினத்தை மறப்பதன் அவசியம் அவருக்குத் தெளிவாக விளங்கும். இந்நுண்ணறிவைப் பெறாத வரை, சினத்தை மறப்பதன் அவசியம் அவருக்கு விளங்காது.

## ii) உறுதி கொள்ளுதல்

நுண்ணறிவைப் பெற்றவர் உறுதி கொள்ள வேண்டும். என்னவென்று உறுதி கொள்ள வேண்டும்?

"என் அறிவைக் கெடுக்கும் சினத்தை; நான் பாவம் செய்வதற்குக் காரணமாகிய சினத்தை, என் பெருமையைக் கெடுக்கும் சினத்தை; என்னைப் பிறர் வெறுக்கக் காரணமாகிய சினத்தை; என்னுள்ளிருந்நே எனக்குக் கேடு செய்யும் சினத்தை; என்னை நரகத்திற்குள் தள்ளிவிடும் சினத்தை, என்னை அது அழிப்பதற்கு முன் நான் அதை அழித்துவிட வேண்டும்.

"இதுநாள்வரை சினத்தினால் அறிவிழந்து தீமைகளைச் செய்துவிட்டேன்; என் சினத்தினால் பிறருக்கு எவ்வளவு வேதனை! பிறருக்கு எவ்வளவு துயரம்! பிறருக்கு எவ்வளவு துன்பம்! இப்போது இதை உணர்கிறேன்."

"போதும் இந்த மடைமை. இனிமேலும் சினத்தில் பெருமை கொள்வதில்லை. அதில் நியாயத்தைத் தேடுவதில்லை. தீயவை தீயவையே! சினமும் அதுபோன்றதே! இன்றிலிருந்து, இப்போதிலிருந்து, மனத்தில் எழும் சினத்தை அடக்கி ஆள்வேன்; அதை மனத்திலிருந்து வேரறுப்பேன்." இவ்வாறு உறுதி கொள்ள வேண்டும்.

## iii) மன்னிப்புக் கோருதல்.

சினத்தை மறக்க உறுதி கொண்டவர், இதுநாள்வரை தான் சினம் கொண்டு, தீமை செய்துள்ளதை மறத்தலாகாது. உள்ளம் வருந்தி, பகவான் புத்தரிடம் (இறைவனிடம்) மன்னிப்புக் கேட்க வேண்டும்.

பகவான் புத்தருக்கு முன்னால் மண்டியிட்டு, தான் சினம் கொண்டு தீமை செய்துள்ளதை ஒப்புக் கொண்டு, உள்ளம் வருந்தி, மன்னிப்புக் கேட்க வேண்டும்.

தான் சினம் கொண்டு தீமை செய்துள்ளதை ஒப்புக் கொண்டு, உள்ளம் வருந்தி, மன்னிப்புக் கேட்பவர், இனிமேலும் சினம் கொண்டு தீமை செய்ய அஞ்சுவார். தவறி மீண்டும் சினம் கொண்டு தீமை செய்துவிட்டாரென்றால், "சினம் கொண்டு தீமை செய்துவிட்டோமே" என உள்ளம் வருந்தி, வேதனைப்படுவார். மனசாட்சி இவரை உறுத்தும். மீண்டும் சினம் தன்னை ஆட்கொள்ளாமல் கவனமாய்க் காத்துக்கொள்வார்.

ஆகவே, தான் முன்பு சினம் கொண்டு தீமை செய்துள்ளதை ஒப்புக் கொண்டு, உள்ளம் வருந்தி மன்னிப்புக் கேட்பவர், மனத்தில் எழும் சினத்திற்கு எதிராக மனத்திலேயே பாதுகாப்பை அமைத்துக் கொள்வார்.

ஆனால் சினத்தை மறக்க உறுதி கொண்டவர், தான் இதுநாள் வரை சினம் கொண்டு தீமை செய்துள்ளதை அலட்சியப் படுத்தி, அதற்காக உள்ளம் வருந்தாவிட்டால்; மன்னிப்புக் கேட்காவிட்டால், மீண்டும் சினம் கொண்டு தீமை செய்ய அஞ்சமாட்டார்.

தவறி, மீண்டும் சினம் கொண்டு தீமை செய்துவிட்டாரென்றால், இவர் உள்ளம் வருந்தாது. "சினம் கொண்டு தீமை செய்துவிட்டோமே" என்று உள்ளம் வருந்தி வேதனைப்படமாட்டார். மனசாட்சி இவரை உறுத்தாது. தான் சினம் கொண்டதற்கு ஏதேனும் ஒரு காரணத்தைத் தேடி, தன் சினம் நியாயமானதே எனத் தன் தவற்றை உதாசீனப் படுத்துவார்.

தான் சினம் கொண்டதற்காக உள்ளம் வருந்தாத இவர், தன் சினத்தில் நியாயத்தைத் தேடும் இவர், சினத்தை அடக்கிக் காப்பதில் முழு கவனம்

செலுத்த மாட்டார். அதில் அக்கரையும் ஆர்வமும் கொள்ளமாட்டார். சில நாட்கள் அரை மனத்துடன் முயற்சி செய்து பின் கைவிட்டுவிடுவார். பழைய நிலைக்கே மீண்டும் சென்றுவிடுவார். சினம் இவரிடம் நீங்காது நிலைத்திருக்கும்.

### iv) பிறர் பிழை பொறுத்தல்.

மற்றவர் செய்த குற்றம் காரணமாக நம் மனத்தில் சினம் எழும் என்பதால், சினத்தை மறக்க உறுதி பூண்டவர் பிறர் பிழை பொறுத்தல் வேண்டும். பிறர் சினம் கொண்டு நமக்கு வேதனை தந்த போதிலும், வேதனையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். பொறுத்துக் கொள்ளாவிட்டால், மனத்தில் சினம் எழுந்து நம்மைச் சரித்துவிடும். பொறுத்துக் கொண்டோமென்றால், மனத்தில் பொங்கி எழும் சினம் சற்று நேரத்தில் தணிந்துவிடும்.

பொறுத்துக் கொள்வதோடு, பிறர் நமக்கிழைத்த தீமைகளைப் மன்னிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மன்னிக்கும் மனம் நம்மிடம் இல்லாவிட்டால், பிறர் செய்த தீமைகளை எண்ணி எண்ணி, மனம் சினம் கொள்ளும்.

அவன் என்னைத் திட்டினான்; அவன் என்னை இகழ்ந்தான்; அவன் என்னை நிந்தித்தான்; அவன் என்னை வென்றான்; அவன் என்னைக் கொள்ளையிட்டான் . இத்தகைய எண்ணங்களை உடையோரிடம் சினம் நீங்காது நிலைத்திருக்கும். எப்போதெல்லாம் மனம் இப்படி எண்ணுகிறதோ, அப்போதெல்லாம் மனத்தில் சினம் எழும்.

நாம் செய்த தீமைகளுக்கு இறைவனிடம் மன்னிப்புக் கோரிய நாம், பிறர் நமக்கிழைத்த தீமைகளை மன்னித்தோமென்றால், சினத்தின் வல்லமை குறையும்; அதை எதிர்த்துப் போராடும் நம் வல்லமை கூடும்.

ஆகவே, மற்றவர் பிழை பொறுத்தலும், மற்றவர் நமக்கிழைத்த தீமைகளை மன்னித்து மறத்தலும், சினத்தை வெல்லும் மார்க்கங்களாகும்.

## V) விழிப்புணர்வும் நிதானமும்

நம் மனத்தில் சினம் முன்னறிவிப்பின்றி திடீரென்று எழும். பதுங்கியிருந்து திடீரெனச் சீறி எழும் நாகத்தைப் போல்; வழிப்போக்கன் மீது பதுங்கியிருந்து திடீரெனப் பாயும் கொள்ளைக்காரனைப்போல், சினம் திடீரெனத் தோன்றி மனத்தைப் பற்றிக் கொள்ளும்.

திடீரென நம் மனத்தில் எழும் சினத்தை விழிப்புணர்வினாலும், நிதான உணர்வினாலும் தடுத்து நிறுத்தலாம். அதாவது, திடீரென எழும் சினம் மனத்தைப் பற்றிக் கொள்ளுமுன், விழிப்புற்று , நிதான உணர்வினால் அதை அடக்கிக் காக்க வேண்டும்.

உதாரணத்திற்கு நம்மை எவராவது பழித்துப் பேசி, அதன் காரணமாக நம் மனத்தில் சினம் எழுந்தால், நம்மை நாமே எச்சரித்துக் கொள்ள வேண்டும். "மனத்தில் சினம் எழுகின்றது." என எச்சரிக்கையடைந்து, விழிப்புற்று, நிதான உணர்வினால் சினம் நம்மை ஆட்கொள்ளாமல் காத்துக் கொள்ள வேண்டும்.

இப்போது நம்மிடம் விழிப்பும், நிதானமும் உண்டென்பதால், பொங்கி எழுந்த சினம் எப்படித் தோன்றியதோ, அப்படியே மறைந்துவிடும்

நம்மிடம் விழிப்புணர்வும், நிதான உணர்வும் வளர வளர, சினம் எழும் போதெல்லாம் அது எழுவதைத் தெளிவாக உணரலாம். உணர்ந்து விழிப்புற்று, நிதானத்தால் அடக்கிக் காக்கலாம்.

## vi) பக்தியும் தர்ம உபதேசங்களும் மிகவும் உதவும்

மனக் குழப்பமும், சந்தேகமும், விரக்தியும், மனச்சோர்வும் நம் உறுதியைக் கெடுக்காமல் காத்துக் கொள்ள வேண்டும். ஏன், நம்மைச் சுற்றிலும் சினம் கொள்வது இயல்பானதே எனக் கருதும் மக்களும்; சினம் கொள்வோர் மீது பதிலுக்குச் சினம் கொள்ளும் மக்களும் ; சினத்தில் நியாயத்தைத் தேடும் மக்களும் ; சினத்தை வல்லமை எனக் கருதும் மக்களும் உள்ளார்கள்.

திட்டுவோரைப் பதிலுக்குத் திட்டும் மக்களும்; பழிப்போரைப் பதிலுக்குப் பழிக்கும் மக்களும்; நிந்திப்போரைப் பதிலுக்கு நிந்திக்கும் மக்களும்; தீங்கிழைப்போருக்குப் பதிலுக்குத் தீங்கிழைக்கும் மக்களும் ; மற்றவர் துயரத்தில் மகிழும் மக்களும் உள்ளார்கள்.

இவர்கள் யாவரும் சினத்தை அடக்கி காப்பதன் பெருமையை அறியாத மக்கள். தீமை செய்தோருக்குப் பதிலுக்குத் தீமை செய்யாதோரின் சிறப்பை அறியாத மக்கள். இவ்வகையான மக்களின் மத்தியில், சினத்தை அடக்கிக் காத்து, பொறுத்துக் கொள்வதென்பது அவ்வளவு எளிதான செயலன்று.

இதுநாள் வரை சினம் கொண்டு பழகிவிட்ட நமக்கு, இப்போது சினத்தை அடக்கிக் காத்துப் பொறுத்துக் கொள்வது, பலவீனம் போல் தோன்றும்; மற்றவர் முன் அவமானப் படுவது போல் தோன்றும்; தாழ்ந்து போனது போல் தோன்றும்; மானம் இழந்தது போல் தோன்றும். தோல்வியுற்றதுபோல் தோன்றும்; கோழைத்தனம் எனத் தோன்றும்; மடைமை எனத் தோன்றும்.

மனம் குழம்பிச் சஞ்சலமடையும், சந்தேகம் எழும், விரக்தி எழும், மனம் சோர்வு அடையும். மனம் பல காரணங்களை எண்ணி, நம் உறுதியைக் கைவிட்டுவிடுமாறு நம்மைத் தூண்டும்.

இச்சமயங்களில் நம்மை நாம் கவனமாய்க் காத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் நம் மனவுறுதி கெடும். சினம் நம்மை வென்றுவிடும். எப்படி நாம் காத்துக் கொள்வது?

இச்சமயங்களில் தர்ம உபதேசங்களை ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். சினத்தினால் ஏற்படும் துன்பங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். சினத்தினால் கெட்டோரின் கதியை எண்ண வேண்டும். சினத்தைக் காப்பதனால் ஏற்படும் நன்மைகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சினத்தைக் காத்த பெரியோர்களின் பெருமைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பகவான் புத்தரை நம்பும் மனத்துடன் தியானிக்க வேண்டும். உள்ளத்தில் பக்தி கொண்டு, பகவான் புத்தரிடம் சரணடைந்து, அவருடைய உதவியையும், பாதுகாப்பையும் கோர வேண்டும்.

இப்போது நாம் பக்தியுடன் பகவான் புத்தரையும், தர்ம உபதேசங்களையும், எண்ணுவதால், மனச் சஞ்சலமும், மனக்குழப்பமும், சந்தேகமும், விரக்தியும், மனச் சோர்வும் , நம்மை விட்டு விலகும். மனத்தில் ஊக்கம் எழும். நாம் நம் உறுதியைக் கைவிட மாட்டோம்.

பெருமையும் , அகந்தையும், கர்வமும், ஆணவமும் சினத்தின் நண்பர்கள். எவரிடம் இவை உண்டோ, அவரிடம் சினமும் இருக்கும். இவை நம்மிடம் இருந்தால், சினம் நம்மை எளிதில் ஆட்கொள்ளும். சினத்தை வெல்ல விரும்பும் நாம், இவற்றை மனத்திலிருந்து அகற்ற வேண்டும். எப்படி இவற்றை அகற்றுவது?

அடக்கமும், பணிவும், வணக்கமும், மரியாதையும் நம்மைக் காக்கும் குணங்கள்; சினத்தை எதிர்க்கும் குணங்கள்.

ஆகவே, எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும், நம்மிடம் அகத்தே அடக்கமும், பணிவும்; புறத்தே பிறருடன் உறவாடும்பொழுது வணக்கமும், மரியாதையும் இருக்குமானால் சினம் நம்மைச் சரிக்காது.

### vii) இடைவிடாத முயற்சி

இதுநாள் வரை சினம் கொண்டு பழகிவிட்ட நாம், நினைத்த மாத்திரத்திலேயே சினத்தை வெல்வது, சினத்தை மனத்திலிருந்து வேரறுப்பது, சினத்தை மறப்பது என்பது சாத்தியமாகாது. இது ஒரு சிரமமான போராட்டம்.

தோல்விகள் வரும். தவறி மீண்டும் சினம் கொண்டுவிட்டால், அதை அலட்சியப் படுத்தாமல், மறைக்காமல், பகவான் புத்தரிடம் கூறி, உள்ளம் வருந்தி, மன்னிப்புக் கேட்க வேண்டும். மீண்டும் சினம் கொள்வதில்லை என உறுதி பூண்டு, சினத்தை அடக்கிக் காப்பதில், முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். மனம் தளர்ச்சியடையாமல் போராட வேண்டும்.

மனம் தளர்ச்சியடையாமல் போராடினால், படிப்படியாகச் சினத்தின் வல்லமை குறையும்; அதை அடக்கிக் காக்கும் நமது வல்லமை கூடும். இனிமேல் எப்போதெல்லாம் சினம் மனத்தில் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் அதை அடக்கிக் காத்துவிடலாம்.

## * கோபத்தை வெல்லும் வழி *

சினத்தை அடக்கிக் காக்கும் வல்லமையை நாம் பெற்றுவிட்ட போதிலும், சினத்தை இன்னும் நாம் அழிக்கவில்லை. நம் முயற்சியைத் தொடர வேண்டும். நம் முயற்சியைத் தொடர்ந்தோமென்றால் , நாளடைவில் சினம் நம்மை விட்டு முழுமையாக விலகிவிடும். நம் மனத்திலிருந்து சினம் முழுமையாக மறைந்து விடும். இப்போது சினத்தை நாம் வென்றுவிட்டோம்; சினத்தை அழித்துவிட்டோம்; சினத்தை மனத்திலிருந்து வேரறுத்துவிட்டோம்; சினத்தை மறந்துவிட்டோம்.

இனிமேல், நம் மனத்தில் சினம் எழாது. சினத்தினால் இனி நமக்குத் துன்பம் ஏதும் இல்லை.

---

## 8. சினம் கொண்டு தம்மை இகழ்ந்தோரைப் பகவான் புத்தர் வென்ற கதை

பகவான் புத்தர் காலத்தில், பிராமணர்கள், தங்கள் குலம் பிராமண குலம் என்றும்; பிராமணர்கள் பிரம்மாவின் வாயினின்றும் பிறந்தவர்களென்றும்; பிராமண குலமே உயர்ந்த குலம் என்றும்; தாங்கள் பிறப்பினால் உயர்ந்தவர்கள் என்றும் கூறிக் கொண்டனர்.

பிராமணர்களிடையே ஒரு பகுதியினர் தங்களை “தனன்ஜானி" பிராமணர் என்று அழைத்துக் கொண்டனர் . மற்ற பிராமணர்களைப் போல் தனன்ஜானி பிராமணர்கள், பிரம்மாவின் வாயினின்றும் பிறக்கவில்லை என்றும்'; பிரம்மாவின் உச்சந்தலையிலிருந்து பிறந்தவர்கள் என்றும்; ஆகவே பிராமண குலத்தில் தாங்களே உயர்ந்தோர் என்றும் கூறிக் கொண்டனர்.

பகவான் புத்தர் காலத்தில் இந்தியாவில், இராஜகிரகம் என்று ஒரு பட்டணம் இருந்தது. அப்பட்டணத்திலும், சுற்றுப்புற கிராமங்களிலும் பல தனன்ஜானி பிராமணர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களிடம் குலப் பெருமை மிகுந்திருந்தது.

பிராமணர்கள் தங்களை உயர் குலத்தான் என்றும்; பிறப்பினால் தாங்களே உயர்ந்தவர்கள் என்றும் கூறிக்கொண்ட போதிலும், பகவான் புத்தர் இவர்கள் கூற்றில் உண்மை இல்லை என உலகிற்கு உபதேசம் செய்து வந்தார்.

பிறப்பினால் ஒருவன் உயர்ந்தவன் என்பதும், பிறப்பினால் ஒருவன் தாழ்ந்தவன் என்பதும், தவறான கொள்கைகள். இத்தகைய தவறான கொள்கைகளைப் பின்பற்றுவோர், தவறான கொள்கைகள் காரணமாக, அறமில்லா எண்ணங்களை எண்ணி, அறமில்லாச் சொற்களைப் பேசி, அறமில்லாச் செயல்களைச் செய்து, பிறருக்கும் துன்பம் கொடுத்து, தாமும் கெடுவார்கள் என உபதேசம் செய்து வந்தார்.

பிறப்பினால் ஒருவன் உயர்ந்தவன் என்பதும், பிறப்பினால் ஒருவன் தாழ்ந்தவன் என்பதும், மனிதன் ஒருவனை ஒருவன் ஆதிக்கம் செய்வதற்காக, மனிதனே அமைத்துக் கொண்ட விதிகளே தவிர, அதில் உண்மையில்லை. இது தவறான கொள்கை, இதில் அறம் இல்லை என்று பகவான் புத்தர் உபதேசம் செய்து வந்தார்.

எதில் உண்மையில்லையோ, எதில் அறமில்லையோ, அதைப் பின் பற்றுவதால் துன்பமே தவிர நன்மை இல்லை என்பதால், அறிவுடையோர் இத்தகைய தவறான கொள்கைகளை விட்டுவிட வேண்டும் என்று உபதேசம் செய்து வந்தார்.

எக்குடிப் பிறப்பினனாயினும், எவனொருவனிடம் கல்வியறிவும் , அறமும், அன்பும், பக்தியும், நற்குணங்களும், தன்னடக்கமும் உண்டோ, அவன் உலகோருக்கு இனியவன். அவனே உயர் குடிப்பிறப்பினன்.

எக்குடிப் பிறப்பினனாயினும், எவனொருவனிடம் கல்வியறிவும், அறமும், அன்பும், தன்னடக்கமும், பக்தியும், நற்குணங்களும் இல்லையோ, அவனை உலகம் வெறுத்துத் தூற்றும். அவனே தாழ்ந்த குடிப்பிறப்பினன் என்று பகவான் புத்தர் உலகிற்கு உபதேசம் செய்து வந்தார்.

பிறப்பினால் ஒருவன் உயர் குடிப்பிறப்பினன் ஆவதில்லை. பிறப்பினால் ஒருவன் தாழ்ந்த குடிப்பிறப்பினன் ஆவதில்லை. செயல்களாலேயே ஒருவன் உயர் குடிப்பிறப்பினன் ஆகிறான். செயல்களாலேயே ஒருவன் தாழ்ந்த குடிப்பிறப்பினன் ஆகிறான் என்று பகவான் புத்தர் உலகிற்கு உபதேசம் செய்து வந்தார்.

எக்குலத்தோராயினும், அனைவருமே பெண்ணின் கருப்பையிலிருந்துதான் பிறக்கிறார்கள். ஆகவே, பிறப்பினால் ஒருவன் உயர்ந்தவன் என்பதும், பிறப்பினால் ஒருவன் தாழ்ந்தவன் என்பதும் தவறான கருத்துகள் எனப் பகவான் புத்தர் உபதேசம் செய்து வந்தார்.

பகவான் புத்தரின் உபதேசம் பிராமணர்களின் கொள்கைகளுக்கு மாறுபட்டதாக இருந்ததால், அவர்கள் அதை ஏற்கவில்லை. குறிப்பாக, குலப்பெருமை மிகுந்த தனன்ஜானி பிராமணர்கள் பகவான் புத்தரை வெறுத்தார்கள். தங்கள் மதத்திற்கு மாறுபட்டட கருத்துகளை உபதேசம் செய்பவர் என்றும், குலத்தை அழிப்பவர் என்றும் கருதினார்கள். அவரையும், அவருடைய உபதேசங்களையும், கேலி செய்து, பரிகசித்து, பழித்து இகழ்ந்தார்கள்.

தனன்ஜானி பிராமணர்கள் கூடி ஒரு சபை அமைத்தார்கள். பகவான் புத்தர் குலத்தை அழிப்பவர் என்றும், தங்கள் மதத்திற்கு மாறுபட்ட கருத்துகளை உபதேசிப்பவர் என்றும், அவருக்கு ஆதரவு தரக்கூடாதென்றும், அவரை எல்லா வகையிலும் எதிர்க்க வேண்டும் என்றும் தீர்மானித்தார்கள்.

சபைத் தலைவராகப் பாரட் வாஜா எனும் பிராமணரைத் தேர்வு செய்தார்கள். இந்த சபை கூடும் போதெல்லாம் , பகவான் புத்தரைக் கேலி செய்து, பரிகசித்துப் பாட்டுகள் தொகுத்துப் பாடுவார்கள்.

பாரட் வாஜா பிராமணர் நிலபுலன்கள் அதிகமாக வைத்திருப்பவர்; வசதியாக வாழ்பவர். குலப் பெருமை மிகுந்தவர். பிறப்பினால் தான் உயர்ந்தவன் என்ற பெருமையில், கர்வமும், அகந்தையும் கொண்டிருந்தார். இவர் பகவான் புத்தரை மிகவும் வெறுத்தார். கடுஞ்சொற்களால் அவரைத் தூற்றி இகழ்வார்.

அவருடைய மனைவியும் ஒரு பிராமிணி. பகவான் புத்தரிடம் மிகவும் பக்தி கொண்டவள். எப்போதெல்லாம் அவள் தும்முகிறாளோ இருமுகிறாளோ, நடையில் தடுமாறுகிறாளோ அப்போதெல்லாம் பகவான் புத்தரின் நாமத்தை மூன்று தடவை உச்சரிப்பாள். சில சமயங்களில் பக்திப் பரவசத்தில், பகவான் புத்தரையும், தர்ம உபதேசங்களையும் புகழ்ந்து கவிதை பாடுவாள்.

இவள் பகவான் புத்தரின் நாமத்தை உச்சரிக்கும் போதெல்லாம், அல்லது கவிதை பாடும் போதெல்லாம் பாரட் வாஜா பிராமணர் கடுஞ்சினம்.

கொள்வார். தம் காதுகளிரண்டையும் பொத்திக் கொள்வார்.

“அந்த மொட்டைத் தலை ஆண்டியை இந்த வீட்டில் புகழாதே," என மனைவியைக் கண்டித்து, கடும் சொற்களால் திட்டுவார். பிராமணர் சினம் கொண்டு கண்டித்துத் திட்டிய போதிலும், இவளுடைய பக்தி குறையவில்லை. பகவான் புத்தரின் நாமத்தை உச்சரிப்பதையும், புகழ் பாடுவதையும் அவள் நிறுத்தவேயில்லை.

பிராமணர் சினம் கொண்டு திட்டும் போதெல்லாம், "நீங்கள் அவரின் அறத்தையும், ஞானத்தையும் அறியாததால் இகழ்கிறீர்கள். அறிந்தீர்களென்றால், இகழமாட்டீர்கள்," எனப் பிராமணரைச் சமாதானப் படுத்துவாள்.

ஒருநாள் பாரட் வாஜா பிராமணர் சபை அங்கத்தினர்களைத் தன் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தார். தன் மனைவி விருந்தினர்களுக்கு முன் பகவான் புத்தரைப் புகழ்பாடி வந்தவர்களை அவமானப் படுத்தி விடுவாளோ, என அஞ்சினார் பிராமணர். விருந்திற்கு முதல் நாள் இரவு மனைவியிடம் "இந்த வீட்டில் அந்த மொட்டைத் தலை ஆண்டியை உன் விருப்பம் போல் புகழ்ந்து பாடிக் கொள். நாளை என் நண்பர்களை விருந்துண்ண வருகிறார்கள். அவர்கள் முன் எதையேனும் பாடி, அவர்களை அவமானப் படுத்திவிடாதே. அப்படிச் செய்யமாட்டேன் என எனக்கு வாக்குறுதி கொடு" என மனைவியிடம் கூறினார்.

பிராமிணியோ அப்படி ஒரு வாக்குறுதி தன்னால் கொடுக்க முடியாது என மறுத்துவிட்டாள்.

"இந்த வீட்டில் அந்த மொட்டைத் தலை ஆண்டியைப் புகழ்ந்து பாடி, என்னை அவமானப் படுத்துவது மட்டுமல்லாமல், நாளை நம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களையும் அவமானப் படுத்தப் போகின்றாயா! உன்னைத் துண்டு துண்டாக வெட்டிக் கொல்வேன்” என மிரட்டினார்.

பிராமிணியோ "என்னைத் துண்டுத் துண்டாக வெட்டிக் கொன்றாலும், அதை ஏற்பேனே ஒழிய பகவான் புத்தரின் புகழ் பாட மாட்டேன் என வாக்குறுதி கொடுக்கமாட்டேன்" எனக் கூறினாள்.

அப்படிக் கூறியவள், பக்திப் பரசவத்தில், தன்னையும் மறந்த நிலையில், பகவான் புத்தரைப் புகழ்ந்து கவிதை பாடினாள். இதைக் கேட்டதும், பிராமணரின் சினம் தணிந்தது. சினம் தணிந்ததும் மனைவியின் பக்தி,

தன் மிரட்டலுக்குக் கட்டுப்படாது என உணர்ந்து, அமைதியானார்.

மறுநாள் காலை, வேலைக்காரர்களின் உதவியுடன், இவள் பலவகை உணவுகளைத் தயாரித்தாள். உணவருந்தும் நேரம் வந்ததும், தானே விருந்தினர்களுக்கு உணவு பரிமாறினாள்.

உணவு பரிமாறும்போது, இவளுக்கு நடை தடைப்பட்டது. தும்மிய போதெல்லாம், இருமிய போதெல்லாம், நடை தடுமாறிய போதெல்லாம் பகவான் புத்தரின் நாமத்தை உச்சரிப்பது இவளுக்குப் பழக்கம் என்பதால், இப்போதும் அப்பழக்க தோசத்தினால், பகவான் புத்தரின் நாமத்தை மூன்று முறை உச்சரித்தாள்.

ஆனால் உணவருந்தும் விருந்தினர் அனைவருமே, பகவான் புத்தரை வெறுப்பவர்கள்; அவரை விரோதி என்று கருதுபவர்கள். அவரையும் அவருடைய உபதேசங்களையும் எதிர்ப்பதற் கென்றே அமைத்த சபைத் தலைவரின் இல்லத்தில் விருந்துண்ண வந்தவர்கள்.

உணவு பரிமாறும்போது, அதுவும் தங்கள் சபைத்தலைவரின் மனைவி, பகவான் புத்தரைப் புகழ்வதைக் கேட்டதும், அனைவரும் சினம் கொண்டார்கள். தங்களை விருந்திற்கழைத்து அவமானப் படுத்தியதாகக் கருதினார்கள்.

"இவள் நம் வம்சத் துரோகியிடம், பக்தி கொண்டவள்; மாற்றான் மதத்தைச் சார்ந்தவள். இவள் கையால் பரிமாறின உணவை உண்ணக்கூடாது." எனக்கூறிக் கைகளிலிருந்த ஆகாரத்தை உதறிவிட்டு, வாயிலிருந்த உணவைத் துப்பிவிட்டுச் சென்று விட்டார்கள்.

மனைவி தன் விருந்தினரை அவமானப் படுத்தி, விருந்தையும் கெடுத்து, தன்னையும் விருந்தினர் முன் அவமானப் படுத்தி விட்டாளே என எண்ணிய பிராமணர், சினம் கொண்டு கடுஞ்சொற்களால் மனைவியைத் திட்டினார்.

"எல்லா இடங்களிலுமா இந்த மானங்கெட்டவள் அந்த மொட்டைத் தலை ஆண்டியைப் புகழ வேண்டும்." எனத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

பிறகு மனைவியிடம், "இதற்கு எல்லாம் காரணம் அந்த மொட்டைத் தலை ஆண்டிதான். இப்போதே போய் உன் குருவை விவாதித்துத் தோற்கடிக்கிறேன்." என்று கூறிப் புறப்பட்டார்.

ஆத்திரத்துடன் போகும் பிராமணனிடம் "தாராளமாகப் போங்கள். அவரை விவாதத்தில் வெல்வதற்கோ, அவருக்கு அறிவுரை கூறுவதற்கோ பிரபஞ்சத்தில் எவரும் இல்லை. ஆனால் அங்குப் போவதால், தங்களுக்குத்தான் ஏதேனும் நன்மை ஏற்படும்" என பிராமிணி கூறினாள்.

பகவான் புத்தரிடம் வந்த பிராமணர் , வணக்கம் தெரிவிக்காமலேயே இவ்வாறு கேட்டார்:

**எதை அழித்தால் நாம் மகிழ்ந்து வாழலாம்.**

**எதை அழித்தால் இனி நாம் அழமாட்டோம்.**

**கௌதமரே, எல்லாவற்றுக்கும் மேலாக,**

**எதை அழிப்பதைத் தாங்கள் ஆமோதிக்கின்றீர்.**

(அதாவது, பிராமணரின் நோக்கம் என்ன வென்றால், ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்டு, பகவான் புத்தரைத் தடுமாற வைத்து, விவாதத்தில் வெல்ல வேண்டும் என்பதாகும். பகவான் புத்தர் எதையேனும் அழிக்கலாம் (கொல்லலாம்) என்று பதிலளித்தாரென்றால், அழிப்பதை (கொல்வதை) ஆமோதிக்கின்றீரா! அப்படி என்றால் என்ன தவ வாழ்வு வாழ்கிறீர்” என விவாதத்தில் வெல்லலாம்.

மாறாக, எதையும் அழிக்கக் கூடாது (கொல்லக்கூடாது) என்று பகவான் புத்தர் பதில் அளித்தாரென்றால், "காமம், வெறுப்பு, பேதமை இவற்றை அழிக்கக்கூடாதென்கிறீரா! என்ன தவ வாழ்வு வாழ்கிறீர்” என விவாதத்தில் வெல்லலாம்.

பகவான் புத்தர், எதையேனும் அழிக்கலாம் எனப் பதில் அளித்தாலும், அல்லது எதையும் அழிக்கக்கூடாது எனப் பதில் அளித்தாலும், இருவகையிலும் அவரை வி வாதத்தில் வென்றுவிடலாம் என்று எண்ணி, பிராமணர் இப்படிக் கேட்டார்.)

ஆனால், பிராணரின் நோக்கத்தை அறிந்த பகவான் புத்தர், இப்படிப் பதிலளித்தார்.

**சினத்தை அழித்தால் இனி நீங்கள் மகிழ்ந்து வாழலாம்.**
**சினத்தை அழித்தால் இனி நீங்கள் அழ மாட்டீர்கள்.**

**அறிவைக் கெடுக்கும் சினம் என்னும் விஷத்தை,**
**மற்றவருக்குத் தீங்கிழைக்க மகிழும் சினத்தை,**
**பிராமணரே! இதை அழிப்பதை சான்றோர் ஆமோதிப்பர்.**

**உள்ளம் கவர்ந்தெழும் சினத்தை அழித்தால்,**
**பிராமணரே! இனி நீங்கள் அழமாட்டீர்கள்.**

பகவான் புத்தர் இவ்வாறு பதிலளித்ததும், "வாழ்வில் என் மகிழ்ச்சியை அழிப்பது என்னிடமுள்ள சினம்தான். சினம் என்னிடம் இருக்கும் வரை வாழ்வில் நான் சுகம் காண முடியாது. இதை அறிந்த இவர், என் மேல் கருணை கொண்டு, எனக்கு இதை உபதேசம் செய்கிறார்."

"நானோ இவர் மேல் பகை கொண்டு சினத்தினால் அறிவிழந்து, இவருக்குத் தீங்கிழைக்க வந்தேன். இவரோ என் மீது கருணை கொண்டு எனக்கு நன்மை செய்கிறார்." என எண்ணிய பிராமணர், சினத்தையும், பகையையும் மறந்துவிட்டார்.

பகவான் புத்தரிடம் அவருக்குப் பக்தி எழுந்தது. பகவான் புத்தரை மண்டியிட்டு வணங்கி, தன்னைச் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். பகவான் புத்தரும் பிராமணரைச் சிஷ்யனாக ஏற்றார்.

பிராமணர் துறவு பூண்டு , துறவு வாழ்வை மேற்கொண்டார்.

பாரட் வாஜா பிராமணர் , பகவான் புத்தரிடம் சரணடைந்து , உலகைத் துறந்து, துறவு வாழ்வை மேற்கொண்டதை மற்ற தனன்ஜானி பிராமணர்கள் வரவேற்கவில்லை, விரும்பவில்லை. “நம் சபைத் தலைவர் கௌதமரிடம் சரணடைந்துவிட்டார். இது நம் வம்சத்திற்கே இழுக்கு" எனப் பேசிக் கொண்டனர்.

பாரட் வாஜாவின் இளைய சகோதரர், “என் தமையனார் கௌதமரிடம் சரணடைந்து விட்டார் இது நம் குடும்பத்திற்கு அவமானம்; நம் வம்சத்திற்கு அவமானம்" என எண்ணிச் சினம் கொண்டார்.

"கௌதமர் ஏதோ சூழ்ச்சி செய்து, நம் தமையனாரைத் தன்னோடு சேர்த்துக் கொண்டார். இது நம் சபையை உடைப்பதற்காகக் கௌதமர் செய்த சூழ்ச்சி" என எண்ணினார்.

"நம் குடும்பத்தை அவமானப்படுத்துவதற்காகவும்; நம் வம்சத்தை அவமானப் படுத்துவதற்காகவும், நம் சபையை உடைப்பதற்காகவும் கௌதமர் ஏதோ சூழ்ச்சி செய்து, நம் தமையனாரைப் பலவந்தமாகத் தன்னோடு சேர்த்துக் கொண்டார்," என எண்ணிச் சினம் கொண்டார், ஆத்திரம் அடைந்தார்.

ஆத்திரத்துடன் பகவான் புத்தரிடம் வந்தார். பகவான் புத்தருக்கு வணக்கம், மரியாதை எதையும் தெரிவிக்காமல், கடுஞ்சொற்களால் அவரைப் பழித்து, இகழ்ந்து, திட்டி, ஏசினார்.

"மொட்டைத் தலை ஆண்டி, குடும்பத்தைக் அழிப்பவன், குலத்தை அழிப்பவன், மடையன், முட்டாள், நாய், பேய், பன்றி, கழுதை, எனப் பல கடுஞ்சொற்களால் பகவான் புத்தரைப் பழித்து, இகழ்ந்து, திட்டி, ஏசினார்.

பிராமணர் திட்டி ஓய்ந்த பின், பகவான் புத்தர் அவரிடம் கேட்டார்:

**பகவான் புத்தர் :** பிராமணரே! நண்பர்களோ, உறவினர்களோ அல்லது விருந்தினர்களோ தங்களைக் காண வீட்டிற்கு வருவதுண்டா?

**பிராமணர்:** ஆம், கௌதமரே, சில சமயம் வருவதுண்டு.

**பகவான் புத்தர்:** அவர்களுக்காகப் பலவகைச்சுவையான உணவு வகைகளைத் தாங்கள் தயாரிப்பதுண்டா? வருபவர்களின் சௌகரியத்திற்கான ஏற்பாடுகளைத் தாங்கள் செய்வதுண்டா?

**பிராமணர்:** ஆம் கௌதமரே, சில சமயங்களில் செய்வதுண்டு.

**பகவான் புத்தர்:** ஆனால் அவர்கள் இதை எல்லாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால், இவை யாவும் யாரைச் சாரும்.

(அதாவது, சுவையான உணவு வகைகளும், சௌகரியத்திற்கான

ஏற்பாடுகளும் விருந்தினர்களுக்காகத் தயாரிக்கப் பட்ட போதிலும், விருந்தினர் அவற்றை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவை யாவும் யாரைச் சாரும்?)

**பிராமணர்:** கௌதமரே, வந்தவர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவை யாவும் நமக்கே.

(அதாவது, வந்த விருந்தினர், நாம் அவர்களுக்காகத் தயாரித்த சுவையான உணவு வகைகளையும், சௌகரியத்திற்காகச் செய்த ஏற்பாடுகளையும் வேண்டாமென ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவை யாவும் நமக்கே)

**பகவான் புத்தர்:** அதுபோல்தான் இங்கும் பிராமணரே! இகழாத நம்மை எந்தச் சொற்களால் இகழ்ந்தீர்களோ; திட்டாத நம்மை எந்தச் சொற்களால் திட்டினீர்களோ; ஏசாத நம்மை எந்தச் சொற்களால் ஏசினீர்களோ அவற்றை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவை யாவும் உமக்கே! பிராமணரே அவை யாவும் உமக்கே!

பிராமணரே! தம்மை ஒருவர் இகழும்போது, பதிலுக்கு இகழ்பவரும்; தம்மை ஒருவர் திட்டும்போது பதிலுக்குத் திட்டுபவரும், தம்மை ஒருவர் ஏசும்போது பதிலுக்குத் ஏசுபவரும் - இது பிராமணரே, தாங்களும் தங்கள் விருந்தினரும் கூடி விருந்துன்பது போல். ஒருவருக்கொருவர் ஈடு செய்வது போல். நாம் உம்மோடு விருந்துண்ணவுமில்லை, ஈடு செய்யவுமில்லை. ஆகவே, அவை யாவும் உமக்கே! பிராமணரே அவை யாவும் உமக்கே!

பகவான் புத்தர், "அவை யாவும் உமக்கே! பிராமணரே, அவை யாவும் உமக்கே!" எனக் கூறியதைப் பிராமணர் தவறாகப் புரிந்து கொண்டார். சாதாரணமாக முனிவர்கள் சினம் கொண்டு சபிப்பது போல், பகவான் புத்தரும் சினம் கொண்டு தம்மைச் சபிக்கிறார் எனக் கருதி,
"கௌதமரே, தாங்கள் "முற்றுப் பெற்றவர்" எனக் கேள்விப் பட்டேன். ஆனால் சினம் கொள்கிறீரே!" எனக் கூறினார்.

பகவான் புத்தர் பிராமணருக்கு இவ்வாறு பதில் அளித்தார்:

**சீனமற்ற ஒருவரிடம் இனி எங்கிருந்து சினம் எழும் ;**
**தன்னடக்கமுள்ளவர், சாந்தமானவர், பூரண ஞானத்தினால் தெளிவுற்றவர்,**
**சினமற்ற அவரிடம் இனி எங்கிருந்து சினம் எழும்.**

**தன்னை இகழ்வாரைப் பதிலுக்கு இகழ்பவர்,**
**இருவரிலும் இவரே இழிவானவர்.**

**தன்னை இகழ்வாரைப் பதிலுக்கு இகழாதவர்,**
**இரு வகையில் இவருக்கு வெற்றி.**

**மற்றவர் நலனையும், தம் நலனையும் காப்பவர் இவரே!**
**மற்றவர் சினத்தை அறிந்து, தம் சினம் காத்து அமைதியடைவார்.**

**இவர் தனக்கும் மற்றவருக்கும் ஒரு மருத்துவரைப் போல,**
**தன்னையும் குணப்படுத்தி, மற்றவரையும் குணப்படுத்துவார்.**

**அறம் அறியாத மக்களே,**
**இவரை மடையன் என்பார்கள்**.

(அதாவது, பகவான் புத்தர் சினம் கொண்டு தன்னைச் சபிப்பதாகப் பிராமணர் குற்றம் சாட்டினார். அதற்குப் பகவான் புத்தர் பதிலளிக்கின்றார்.

தாம் சினத்தை அழித்து விட்டவரென்றும், தாம் மாசற்றவர் என்றும், பூரண ஞான அறிவினால் தெளிவு பெற்றவர் என்றும்; எக்காரணத்தினாலும் தம்மிடம் இனி சினம் எழாது என்பதால், தாம் எப்படிச் சினம் கொள்ளக் கூடும்.

ஆகவே, பிராமணரின் குற்றச் சாட்டில் உண்மை இல்லை.

அடுத்துப் பகவான் புத்தர், சினத்தைக் காப்போரின் பெருமையை விளக்குகிறார்.

சினம் கொண்டு தம்மை ஒருவர் இகழும்போது, பதிலுக்குச் சினம்

கொண்டு இகழாமல் பொறுத்துக் கொள்பவர் இரு வகையில் வெற்றி பெறுகிறார்.

**அவற்றில் ஒன்று :**

இவர் தம் மனத்தில் எழுந்த சினத்தைக் காத்து, மற்றவரின் இழி சொற்களைப் பொறுத்து, பதிலுக்கு இகழாததால்; தன் சினத்தையும் அடக்கி, இகழ் எனும் குற்றத்தையும் தாம் செய்யாது தம்மைக் காத்துக் கொண்டார்.

**இரண்டாவது :**

"மற்றவர் சினம் கொண்டுள்ளார்" என இவர் உணர்ந்து, தம் மனத்தில் எழுந்த சினத்தைக் காத்துப் பொறுத்துக் கொண்டதால் மற்றவர் சினமும் தணிந்துவிடும். சினம் தணிந்ததும், மற்றவரும் இகழ்வதை நிறுத்திவிடுவார்.

ஆகவே, சினம் கொண்டு தம்மை ஒருவர் இகழும்போது, பதிலுக்கு இகழாதவர்;

முதலாவது : தம் சினத்தை அடக்கி, தாமும் இகழும் குற்றத்தைச் செய்யாது பொறுத்துக் கொண்டார்.

இரண்டாவது : மற்றவர் சினத்தையும் தணித்து, அவரையும் இகழும் குற்றத்திலிருந்து மீட்டுவிட்டார்.
ஒரு மருத்துவரைப்போல், தம்மையும் குணப்படுத்தி, மற்றவரையும் குணப்படுத்தி விட்டார்.

அறம் அறியாத மக்கள் இதனை அறிவதில்லை என்பதால், இவரை மடையன் என்பார்கள். அறம் அறிந்த மக்கள் இதனை அறிவரென்பதால், இவரைப் புகழ்ந்துரைப்பர்.)

இதைக் கேட்டதும், பிராமணர் தம் மடைமையை உணர்ந்தார். சினம் கொண்டு பகவான் புத்தருக்குத் தீங்கிழைக்க எண்ணி, தனக்கே தீங்கிழைத்துக் கொண்டதை உணர்ந்தார்.

"தலையை உயர்த்தி, ஆகாயத்தை நோக்கி எச்சில் உமிழ்ந்தால்,

அந்த எச்சில் உமிழ்ந்தவன் மேலேயே தான் திரும்பி விழும். ஆகாயம் மாசுபடுவதில்லை. அதுபோல், மடையனொருவன், மாசற்ற சான்றோருக்கு தீங்கிழைக்க எண்ணி, தீங்கு செய்தானென்றால், அது அவனிடமே திரும்பி வரும், " என்பதை உணர்ந்தார்.

"அகந்தையினாலும், கர்வத்தினாலும், சினத்தினாலும், பகைமையினாலும், வெறுப்பினாலும் கௌதமருக்குத் தீங்கிழைக்க எண்ணி, நான் எனக்கே தீங்கிழைத்துக் கொண்டேன்."

நானோ இவரைப் பகைவரெனக் கருதி, இவருக்குத் தீங்கிழைக்க இங்கு வந்தேன். இவரோ அதைப் பொறுத்துக் கொண்டதுமட்டுமல்லாமல், என்மீது கருணை கொண்டு, என் நலனைக் கருதி, எனக்கு நல்லுபதேசம் செய்கிறார்.

"நானோ இவரைப் பகைவனெனக் கருதினேன். இவரல்ல எனக்குப் பகைவர். நானே எனக்குப் பகைவன். என்னிடமுள்ள ஆணவமும், கர்வமும், செருக்கும், சினமும், பகைமையும், வெறுப்பும் இவையே என் பகைவர்கள். என்னுள்ளிருந்தே என்னை அழிக்கும் பகைவர்கள்."

"இவர் என்னைத் துன்பத்திலிருந்து மீட்பவர். இவரைப் பின்பற்றுவதால் நன்மையே வரும், துன்பம் இல்லை. இதை அறிந்தே நம் தமையனார் இவரிடம் சரணடைந்திருக்கிறார்.” என உணர்ந்தார்.

இது விளங்கியதும், அவருடைய செருக்கு அடியோடு அழிந்தது. பகவான் புத்தரிடம் பக்தி கொண்டார். பகவான் புத்தரின் முன் மண்டியிட்டு, தன்னைச் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார்.

பகவான் புத்தரும், அவரைச் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார்.

---

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்